விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 தை16 வியாழக்கிழமை (30.01.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 42

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## யாழ்.சப்இன்ஸ்பெக்டருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

### சட்டமா அதிபர் பணிப்பு

(கொழும்பு)

நெல்லியடியில் ஈ.பி.டி.பி அலுவலகம் தாக்கப்பட்டதையடுத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 17 பேரில் ஐவருக்கு உடல் காயங்கள் காணப்பட்டதையடுத்து அவர்கள் சட்ட வைத்திய அதிகாரியினால் பரிசோதிக்கப்பட்டனர்.ஐவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டும் என்று பணிக்கப்பட்டனர்.ஆனால் யாழ்ப்பாணம் பொறுப்பதிகாரி சப்இன்ஸ்பெக்டர் சொய்ஸா அதனை மீறி அவர்களை றிமாண்ட் செய்திருந்தார்.இவர்களில் ஜனார்த்தனன் என்றும் 14 வயதுச் சிறுவனும் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

சிறுவர்களைக் கைது செய்து அவர்களைப் பெரியவர்களுடன் றிமாண்டில் வைக்கக்கூடாதென சட்டமா அதிபர் பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை வழங்கியிருந்ததாகவும், அதனையும் மீறி செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பில் சித்திரவதைத் தடுப்புச்சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் தெரிவித்தார் இது குறித்து புலன் விசாரணை ஒன்று மேற்கொண்டு பூரண அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் சட்டமா அதிபர் பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (ந)

## நாவலர் சிலை இன்று திறப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டப முன்றலில் அமைக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் திருவுருவச் சிலை இன்று காலை 8.30 மணிக்கு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மாஅப்பாக்குட்டி ஆவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் அ.சிறிக்குமரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிலைக்கு உபகரிப்புச் செய்த ஆறுதிருமுருகன் நிறைவுரை ஆற்றுவார்.சிற்பி ரமணியின கைவண்ணத்தில் உருவான இச சிலை யாழ்ப்பாணத்தில் உள்ள நாவலர் சிலைகளை விடப் பெரியது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-5)

## காய்ச்சலால் இருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

காய்ச்சல் காரணமாக யாழ்போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 10 மாதக் குழந்தை உட்பட இருவர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த எம்.பத்திநாதர்(வயது52),யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைச் சேர்ந்த அஜித் (10மாதம்)ஆகிய இருவருமே நேற்று உயிரிழந்துள்ளவர்களாவர். (த)

## அனுருத்தவுக்கு விளக்கமறியல்

கண்டி உடத்தலவின்ன முஸ்லிம இளைஞர்கள் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணையில்,முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த உட்பட சந்தேக நபர்கள் 15 பேரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றைய தினம் கொழும்பு நீதிமன்றத்தில் இடம் பெற்ற வழக்கு விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.


(10ம் பக்கம் பார்க்க)

# நம்பியாரின் அறிக்கை அரசுக்கு கிடைக்கவில்லை!

### கருத்துக்கூற அமைச்சர் பீரிஸ் மறுப்பு

(நமது நிருபர்)

**யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியேற்றம் தொடர்பாக முன்னாள் இந்திய இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் சதீஸ் நம்பியாரின் அறிக்கை இதுவரை அரசாங்கத்திற்கு கிடைக்கவில்லை.அறிக்கை கிடைத்த பின்பே அது தொடர்பாக எம்மால் கருத்துக்கூற முடியும் என்று அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**



அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்கும் வழமையான செய்தியாளர் மாநாடு ஒன்றை அமைச்சர் பேராசியரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று அமைச்சில் நடத்திய போது செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கே மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக சதீஸ் நம்பியாரின் அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளிவராத நிலையில் விடுதலைப் புலிகளின் அரசில் அலோசகர் அன்ரன் பாலசிங்கம் உட்பட பல்வேறு தரப்பினரதும் விமர்சனங்களுக்கும்,கண்டனங்களுக்கும் அது ஆளாகியுள்ள நிலையில் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அப்பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை- ஒரு வருடத்தைப்பூர்த்தி செய்வதற்கு இன்னமும் மூன்று வாரங்கள் இருக்கும் நிலையில் அவ்வுடன் படிக்கையை (10ம் பக்கம் பார்க்க)

# யாழ்.பல்கலைக் கழகத்தின் பேரவை நேற்று கூடியது!

### துணைவேந்தர் பதவிக்கு மூவரின் பெயர் சிபார்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பதவிக்கு பெயர்களைச் சிபார்சு செய்வதற்கான பேரவையின் விஷேட கூட்டம் நேற்று துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையின் தலைமையில் நடைபெற்றது.

பிற்பகல் 2.மணி தொடக்கம் இரவு 7மணிவரை தொடர்ந்து இடம் பெற்ற இக் கூட்டத்தில் பேரவையின் 24 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பேரவையில் 25 உறுப்பினர்கள் அங்கத்துவம் பெற்றுள்ள பேதிலும் பேராயர் ஜெபநேசன் வெளிநாடு சென்றுள்ளதால் 24 உறுப்பினர்களே கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

துணைவேந்தர் பதவிக்கு 9பேர் போடடியிட்டனர்.இவர்களில் பேரவை உறுப்பனர்களின் வாக்கு அடிப்படையில் மூவரின் பெயர்கள் அப்பதவிக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

சிபார்சு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரமும்,அவர்களுக்குக் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கையும் வருமாறு.

* பேராசிரியர் குமாரவடிவேல்-62 வாக்குகள் (விஞ்ஞான பீடாதிபதி யாழ. பல்கலைக்கழகம்(10ம் பக்கம் பார்க்க)

## 5ம் கட்டப் பேச்சுக்களின் பின் பாலா வன்னி வருவார்

(நமது நிருபர்)



ஜேர்மன் தலை நகர் பேர்ளினில் அடுத்த மாதம் 7ம்,8ம் திகதிகளில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறவுள்ள 5ம் கட்ட பேச்சுவார்த்தையின் பின் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேர்ளினில் நடைபெறவுள்ள அரசு-புலிகள் பேச்சுவார்த்தைகளில் முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டடு முடிவுகள் எடுக்கப்பட்டபின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்க இருப்பது முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# இயல்பு நிலையை ஏற்படுத்தாவிடில் அமைச்சர்களின் வருகைக்கு எதிர்ப்பு

### யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் எச்சரிக்கை

(யாழப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்கூடியமர அனுமதிக்கும் முன்னர், விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைய வேண்டும் என்று இந்திய முன்னாள் இராணுவத் தளபதி சதீஸ் நம்பியார் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக இலங்கை அரசுக்கு வழங்கியுள்ள ஆலோசனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதை யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது. அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு கடந்த ஒரு வருடமாகிய நிலையிலும் மக்களுடைய இயல்பு வாழ்வு நிலையில் மாற்றம் ஏற்படவில்லை.தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையை உருவாக்கும் நோக்குடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சில ஒப்பந்த விதிகளும் நல்லெண்ண நடவடிக்கைகளும் முழுமையாக நிறைவு செய்யப்படவில்லை.போர் நிறுதத உடன்பாட்டில் விவிக்கப்பட்ட கால அட்டவணையை மீறி சிங்கள ஆயுதப் படையினர் தொடர்ந்தும் கோயில்கள், பாடசாலைகள் மற்றும் வீடுகளிலுமம குடியிருந்து வருகின்றனர்.

போர்நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கு முரணான வகையில்சனநெருக்கடி நிறைந்த தமிழரின் நகரங்கள் பட்டினங்களில் உள்ள சோதனைச்சாவடிகளையும் தடைகளையும் ஆயுதப் படைகள் மறுத்து வருவதோடு பொது மக்களை மிரட்டியும்

(10ம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சிப் பகுதியில் மீளக்குடியமர்ந்தவர்களின் விபரத்தைக் கேட்கும் படையினர்

(தென்மராட்சி)

வன்னிப் பகுதியில் இருந்து தென்மராட்சிப் பகுதியில் மீளக் குடியேறியுள்ள மக்களின் விபரங்களைத் தருமாறு இராணுவத்தினர் 'கிராம சேவையாளர்களைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சிப் பகுதியில் உள்ள கிராம சேவையாளர்கள் பிரிவுகளுக்கு சிவில் உடையில் சென்ற இராணுவத்தனர் இந்த விரங்களைக் கோரியுள்ளனர்.

மீளக்குடியமர்ந்த மக்களின் விபரங்களுடன் மாவீரர் தொடர்பான விபரங்களையும் திரட்டித் தருமாறும் இராணுவத்தினர் கிராம சேவையாளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (வ)

### மிருசுவில் படுகொலைச் சம்பவம்

## இராணுவத்தினர் ஐவருக்கும் விளக்க மறியல் நீடிப்பு

(கொழும்பு)

மிருசுவில் படுகொலைச் சந்தேக நபர்களான இராணுவத்தினர் ஐவரையும் அடுத்த மாதம் 10ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ட்ரயல் அட்பார் மேல் நீதிமன்ற நிதிபதிகள் குழு உத்தரவிட்டுள்ளது.

நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்றில் நடை பெற்ற வழக்கு விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் மீது கொலை உட்பட 19 குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.இதேவேளை சந்தேக நபர்கள் அனைவரும் தாம் நிரபராதிகள் என நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

மேற்படி வழக்குவிசாரணயில் (10ம் பக்கம் பார்க்க).

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பால் நிலையில் ஆண், பெண் என்ற பார்வை மாறின் வன்முறைகளற்ற ஒழுக்க சமுதாயம் உருவாகும்

சமூக உருவாக்கத்தில் பால் நிலை வேறுபாடுகளின் தாக்கம் சமமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றதா! பின்புறத்தில் மறைமுகமாக செயற்படும் எண்ணக்கருத்துக்கள் ஒரு பாலாரைக் குறிப்பாகப் பெண்களை அசமத்துவ நிலைக்குத் த்ள்ளியுள்ளதைச் சமூகத்தின் பல பரிமாணங்களிலும் அறிய முடிகின்றது. ஒரு பெண், பிள்ளைகளைப் பெற்றெடுத்து அவற்றிற்கு பாலூட்டி வளர்க்கின்றாள். இது இயற்கைத் தொழிற்பாடு. இயற்கை கொடுத்த இயல்பு வாழ்நாள் முழுவதும் அவற்றிற்கு ஒரு கடப்பாட்டினைக் கொடுத்துள்ளது. சமூகத்தின் ஒரு பாரபட்ச சிந்தனையாக கட்டி வளர்க்கப்பட்டுள்ளது.

### ஆணுக்கேற்பட்ட அதிகாரம்

பெண், பிரசவம், பாலூட்டுதல் காரணமாக குறிப்பிட்ட காலத்தில் வீட்டுள் முடக்கப்படுகின்றாள். பெண்கள் கட்டுப்பாட்டுள் உள்ள காலப் பகுதியில் ஆண் உணவுக்காக உழைக்கின்றான். பெண் வீடு, வீட்டின் அருகில் உள்ள தொழில்களில் நாட்டம் காட்டினாள். அது படிப்படி யாக ஓர் வாழ்க்கை முறையாக அமைந்து விட்டது. அமைந்தது மட்டு மல்ல வீடும், வீடுசார் பிரதேசமும்- பெண்களுடையதாகவும், வெளித்தலம் ஆண்களுடையதாகவும் வரையறையும் செய்யப்பட்டது. இவ்வாழ்க்கை முறை ஆணிற்கு அதிகாரத்தையும் செல்வச் செருக்கையும் கொடுத்து இதனை அடித்தளமாகக் கொண்டு அவன் பெண்ணைக் கட்டுப்படுத்த ஆரம்பித்தான். பெண்ணை விட அதிகாரத்தை சமுதாயத்தில் பெற்றுக் கொண்டான். காலப்போக்கில் அவன் ஒவ்வொன்றாகக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை சமூகத்தில் நிறுவிக் கொண்டான். ஆண் மீது பெண் பல வழிகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் பெண் மென்மையானவள், கீழ்ப்படிவானவள், அச்சம், மடம், நாணம், கொண்டவள். அவளைப் பாதுகாப்பதற்கு ஆண் தேவை என்ற ஓர் எண்ணக்கருவும் உருவானது. அதே நேரம் ஆண் வலிமையானவன், ஆக்கிரமிப்பாளன், முரட்டுத் தன்மை வாய்ந்தவன் போன்ற தகுதிகளைப் பெற்றுக்கொண்டான். இதனாலேயே ஆணுக்குரிய தகுதிகள் என இனம் காணப்பட்டான். இவ்எண்ணக்கருக்களால் கட்டுண் ட சமுதாய ஒழுங்கு காலகாலமாக மாற்றமின்றி பழமை, சம்பிரதாயம், மரபு ஏன் கலாசாரம் என்ற போர்வைகளில் வளர்க்கப்பட்டு வந்துள்ளது. இதனைப் பல்வேறு தளங்களில் உடைக்க முயலும் போதெல்லாம் அதன் வேர்களை அறுக்கமுடியாது பெண்கள் திண்டாடுவது இன்று அப்பட்டமாகவே தெரிகின்றது.

### சமமற்ற பொறுப்புக்கள்

தொன்று தொட்டு சமூதயத்தினால் வளர்த்து கட்டிக்காத்து வரும் இத்தகைய எண்ணக் கருக்கள் ஆண்கள், பெண்கள் மீது பல சுமைகளைச் சுமத்தியுள்ளன. பெண் சுதந்திரமாக செயற்பட முடியாதவளாக இருக்கின்றாள். அவளின் பொறுப்புகளுக்கு ஆண் பொறுப்புள்ளவனாக்கப்பட்டுள்ளான். இன்று வரை சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் சீதனக் கொடுமைக்கும் சமூகம் விதித்த சுமைகளே காரணமாக உள்ளது. பெண் சுதந்திரமாக தொழில் ஒன்றைத் தேடிக் கொண்டாலும் கூட குடும்பச் சுமைகள் அவளை விட்ட பாடில்லை. குடும்பத்திற்கு அப்பால் தான் அவளது செயற்பாடுகளின் சுதந்திரம் இவ்வாறான சமமற்ற பொறுப்புக்களும் அவளது திறமையினை பங்கு போடுவனவாக உள்ளன.

மகளிர் மன்றம்

சமுதாயத்தில் காணப்படும் சமனற்ற உறவுகளைச் சமப்படுத்த எம்மால் முடியுமா? ஒரு பாலாரிடம் சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்களில் மறு பாலாரின் பங்கு என்ன? இதனை நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் கேட்க வேண்டிய கேள்வி! கேள்வி கேட்டால மட்டும் போதாது. சமமாக்ப் பணிகளைப் பங்கிட்டுச் செயலாற்ற முன்வருவார்களா? இவ்வாறான செயலக் சிந்தனைகள் சமூகத்தில் பலமான மாற்றங்களை உருவாக்குவதில் பலமான சக்தி இன்று ஆண், பெண் என்ற எண்ணக்கருவில் அவர்கள் ஏற்றுநிற்கும் புறநிலைத்தாக்கங்களுக்கு ஒரு புதிய விளக்கத்தைக் கொடுக்கின்றன. இதனால் சமுதாயம் விழிப்படைகின்றது. பாலநிலையில் ஆண், பெண் என்று பார்க்கும் பார்வை மறைந்து நாம் எல்லோரும் சம பங்காளிகள் என்ற எண்ணக் கரு உருவாகும். இந்நிலை வன்முறைகள் பாலியத் தொல்லைகள் அற்ற ஒழுக்கமான ஒரு நெறியைச் சமுதாயத்திற்கு வழங்கும்.

சசி

## கண்காட்சியும் விற்பனையும்

(அச்சுவேலி)

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை பிரதேசசெயலர் பிரிவினால் நடாத்தப்படும் தையல், மனையியல் கண்காட்சியும், விற்பனையும் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேசசெயலர் ஆ. சிவசுவாமி தலைமையில் நடைபெறவுள்ள இவ்ஆரம்ப விழாவில் யாழ் மாவட்ட செயலக தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் வே. வீரபத்திர பிள்ளை பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் இலங்கை வங்கி பிரதேச காரியாலய பிராந்திய முகாமையாளர் சி. நடராசலிங்கம், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். செல்வரத்தினம், கரவெட்டி பிரதேச செயலர் க.கனகரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும்,

பருத்தித்துறை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி த.ஜெயராஜா, நிர்வாக அலுவலர் இ.விக்னேஸ்வரமூர்த்தி, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. நிர்மலன், புலோலி வட மேற்கு கிராமஅலுவலர், எஸ். நாகதீப சோதிரூபன், புலோலி வடமேற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் க. குகேந்திரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-14)

# ஒஸ்ரின் — கருணா சந்திப்பு இன்று

(கொழும்பு)



தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா அம்மான், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஆகியோர்களுக்கிடையிலான சந்திப்பு மட்டக்களப்பு மாவட்ட சூனியப்பிரதேசமான வவுண தீவு பிரதேச செயலக மண்டபத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரொன்புறூவ் ஹெவ்டே தலைமையில் இச்சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பில் கிழக்கு மாகாணத் தளபதி மேஜர் ஜெனரல் பாலசூரியா, மட்டக்களப்பு 233ஆவது படைப்பிரிவு கட்டளைத்தளபதி கேணல் ராஜித டி சில்வா உட்படப் படைத் துறைத்தளபதிகளும் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்ள வுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது பெரும் சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் புலிச்சின்னம் பொறிக்



கப்பட்ட வரவேற்புப் பலகை விவகாரம், யுத்தநிறுத்த மீறல் சம்பவங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் கட்டாயமாக ஆட்களைச் சேர்த்துக் கொள்வது தொடர்பான முறைப் பாடுகள் குறித்து ஆராயப் படவுள்ளது. (உ-8)

## முஸ்லிம்களுக்கு சேவையாற்ற யாழ்ப்பாணத்தில் அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றம், தொழில் அபிவிருத்தி, நஷ்டஈடு சம்பந்தமான கூட்டம் நேற்று முன்தினம் யாழ். மஸ்ரஉத்தின் பாடசாலையில் இடம்பெற்றது.

எம்.ஆர்நௌஷாத் தலைமையில் இடம் பெற்ற உரையாடலில் வடமாகாண இடம்பெயர்ந்த முஸ்லிம் அமைப்பின் தலைவர் எம்.ஏ.சி.முபீன் யாழ் மாவட்ட ஜம்மியதுல் உலமா (மார்க்க அறிஞர்) சபைத் தலைவர் மௌலவி பி.ஏ.எஸ்.சுபியான் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் முஸ்லிம் பொது மக்கள் தாங்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை எடுத்துக் கூறினர். தொழில் ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினை, மீளக் குடியேறும் பொழுது குடியேறுவதற்கான இடப்பிரச்சினை, பாதுகாப்பு, கௌரவமான வாழ்வு, நஷ்டஈடு நிவாரணம், காணாமல் போனவர்களின் நிலை, முஸ்லிம் வட்டாரத்தினுள் தற்போது குடியிருக்கும் இடம்பெயர்ந்த மக்கள் கசிப்புக் காய்ச்சுதல்-விற்பனை, இதன்மூலம் ஏற்படும் சமூக சீர்கேடுகள் ஆகிய பல்வேறுபட்ட விடயங்கள் இதில் ஆராயப்பட்டன.

இறுதியாக, சகல விடயங்களையும் சமூகத்திற்கு நன்மை தரக் கூடியதாக செயல்பட வைக்கப்பட வேண்டுமாயின், கொழும்பிலும் புத்தளத்திலும் அலுவலகத்தை அமைத்து மக்களுக்கு சேவையாற்றிவரும் மௌலவி பி.ஏ.எஸ்.சுபியான் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் வட்டாரத்திலும் ஒரு அலுவலகத்தினைத் திறந்து மக்களுக்குச் சேவையை மேற்கொள்ள வேண்டும் என்று கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வலியுறுத்தினர்.

இதன்படி, விரைவில் யாழ் முஸ்லிம் மக்களுக்காக அலுவலகம் ஒன்றை திறந்து சேவையாற்ற மௌலவி சுபியான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இவ் அலுவலகத்தின் செயற்பாட்டுக்கு மாதிரியாக ஒத்தாசையாகவும் பாதுகாப்பாகவும் இருப்போம் என்றும் முஸ்லிம் மக்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. (உ)

## 100 பௌத்த மதகுருமார் நேற்று யாழ். வந்தனர்

(யாழ்ப்பாணம்)

வடக்குத் தெற்கில் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் நல்லெண்ண விஜயமாக தெற்கில் இருந்து நூறு பௌத்த மதகுருமார் நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

புனர்வாழ்வு புனரமைப்பு மீள் குடியேற்ற அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவின் ஏற்பாட்டில் இங்கு வந்துள்ள இப் பௌத்தமதகுருமார் குழு, 3 தினங்கள் வரை இங்கு தங்கியிருந்து யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளைப் பார்வையிடுவதுடன், மதங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளிலும் ஈடுபடவுள்ளனர். (உ)



தரம் I மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா அண்மையில் யா/ ஏழாலை மேற்கு, சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம். படம்: ஏழாலை நிருபர்

## வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற குடாநாட்டவர்க்குஅரிய சந்தர்ப்பம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு இளைய தலைமுறையினர் ஹோட்டல் முகாமைத்துவம் கற்கவும் அதன் மூலம் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை உல்லாசப் பிரயாணச் சபை யாழ்ப்பாணத்தில் சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ ஸ்தாபனத்தின் கிளையை தொடங்கியிருப்பதன் மூலம் இது சாத்தியமாகியுள்ளது.

இதில் வரவேற்பாளர், பொது விடயங்கள் மற்றும் அறைகள் ஆகியவற்றின் பாராமரிப்பு போன்ற பணிகளுக்கான பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் இருந்து இவற்றுக்கான பயிற்சி வகுப்புக்களும் நேரடிப் பணிக்கான வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வார நாட்களில் மட்டுமே நடத்தப்படும் இவ்வகுப்புக்கள் அடிப்படைத் தரத்தில் 5 மாதங்களும் நேரடிப் பணிபயிற்சி 3 மாதங்களும் நடத்தப் படவுள்ளன.

அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்களால் நடாத்தப்படும் இந்த வகுப்புக்களில் ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளும் இலங்கையின் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பற்றிய அறிவும் தன்னார்வக் கல்வி, பிரத்தியேக மற்றும் தொழில்முறைக்கல்வி ஆகியனவும் சேர்த்துக் கொள்ளப்படும்.

இந்தப் படிப்புகள் ஹோட்டல் முகாமைத்துவம் படித்து முடிக்க ஓர் அடிப்படையாக அமையும். உலகில் மிகப்பாரிய வேலை வாய்ப்பினைக் கொண்டிருப்பது சுற்றுலா மற்றும் பயணத் துறையாகும்.

இலங்கையில் சுற்றுலாத்துறையில் புரளும் பணம் 230 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில் 35ஆயிரம் நேரடிப் பணிகளும், 50 ஆயிரம் மறைமுகப் பணிகளும் உள்ளன.

இதேசமயம், சர்வதேச மட்டத்தில் 204மில்லியன் நேரடி வேலை வாய்ப்புக்களும், 347 மில்லியன் மறைமுக வேலைவாய்ப்புக்களும் உள்ளன.

அதுமட்டுமன்றி, இலங்கை உல்லாசப் பயணச்சபை நடத்தும் இந்த முகாமைத்துவ வகுப்புகள் இலங்கையிலும், பிறநாடுகளிலும் அங்கீகாரம் பெற்றவை. அதனால் வேலை வாய்ப்புப் பெறுவதற்கு ஒரு நன்மதிப்பு உண்டு.

இந்தப் பயிற்சி வகுப்புகள குறித்து மேலும் அறிய விரும்புவோர் ஸ்ரீலங்கா சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவம்(யாழ்ப்பாணக்கிளை) மணியம்கட்டடம், சிறாம்பியடி ஒழுங்கை, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

# தொடர் வெகுஜனப் போராட்டங்களுக்கு தயாராகின்றனர் தென்மராட்சி மக்கள்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினர் தாமாகவே முகாம் விஸ்தரிப்பு, மக்களை வெளியேற்றல் போன்ற செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தவேண்டும். அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினர் உடன்நடவடிக்கை மேற்கொண்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் இதேபோன்று புதிய முகாம்கள் அமைப்பதை தடுத்து நிறுத்தவேண்டும்.

தவறும் பட்சத்தில்தென்மராட்சி மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தொடர் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என கேட்டுக் கொள்கின்றோம்.

தென்மராட்சிப் பகுதியில் இடம் பெற்றுவரும் இராணுவ விஸ்தரிப்பு நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்து வீடுகளை விட்டு படையினரை உடன் வெளியேற்றக் கோரியும் தென்மராட்சி மக்கள் நலச் சேவை சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

ஸ்ரீலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 180 நாட்களுக்குள் மக்களின் வாழ்விடங்களினின்றும் பொது இடங்களினின்றும் இராணுவம் முற்றாக வெளியேறி அவ்விடங்களை மக்கள் குடியேறவும் அவர்களின் இயல்பு வாழ்க்கையை தோற்றுவிக்கவும் வழிவகுக்க வேண்டிய கடப்பாடு ஸ்ரீலங்கா அரசுக்கும், அதன் இராணுவத்துக்கும் உள்ளது.

ஆனால் ஒரு வருடத்திற்கு மேலாகியும் ஸ்ரீலங்கா இராணுவம் உடன்படிக்கையை மதியாது நாளுக்கு நாள் தன்து ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஏதோ ஒரு வடிவில் அரங்கேற்றிய வண்ணம் உள்ளது.

ஒரு புறம் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் புதுப்புது பிரதேசங்களையும் உள்ளடக்கி மக்களைத் தமது சொந்த வீடுகளில் குடியிருக்க விடாது தடுப்பதுடன் மறுபுறத்தில் அதற்கப்பாலுள்ள பிரதேசங்களையும், அங்குள்ள குடியிருப்புக்களையும் ஆக்கிரமித்து மக்களை குடியேற விடாது தடுத்து வருகிறது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்நிலைமை நாளுக்கு நாள் வெவ்வேறு வடிவங்களில் இராணுவத்தால் அரங்கேற்றப்பட்டு வருகின்றது.

இங்கு ஒருசில வீடுகளில் இருந்து தாம் வெளியேறுவது போல காட்டிக்கொள்வதும் பின்னர் வேறு இடங்களில் இன்னும் கூடுதலான வீடுகளையும், நிலங்களையும் உள்ளடக்கி முகாம்களை உருவாக்குவதும் பழக்கமாகிவிட்டது.

தென்மராட்சியில் பெரும் பகுதியை உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் விழுங்கி நிற்கும் இராணுவம், அதற்கு அப்பாலுள்ள பிரதேசங்களிலும் பல இராணுவ முகாம்களை மக்களின் குடியிருப்புக்களை பொருளாதார நிலங்களில் அமைத்துள்ளது.

அத்துடன் நில்லாது தற்போது அல்லாரையிலும் நுணாவிலிலும் தனது முகாமை விஸ்தரித்து வருகின்றது. அல்லாரையிலும் மேலும் பல வீடுகளையும், தென்னங்காணிகளையும் கையகப்படுத்தி முகாம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அப்பிரதேச மக்கள் கண்காணிப்புக் குழு, அரச அதிபர், பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலருக்கும் முறையிட்டும் எந்தவித பலனும் இதுவரை ஏற்படவில்லை.

அதேபோல், நுணாவிலில் இராணுவம் சில வீடுகளிலிருந்து வெளியேறுவது போல பாசாங்கு செய்து அதற்கு அருகில் பாரிய நிலப்பரப்பில் குடியிருப்புக்கள் பலவற்றை உள்ளடக்கி பெரிய முகாமை அமைத்து வருகிறது.

இதனால் சில குடும்பங்கள் வெளியேற்றப்பட்டிருப்பதுடன் பலர் தமது வீடுகளில் குடியேற முடியாதுள்ளது. தவிரவும், அப்பகுதியில் குடியேறியுள்ள மக்களும் பயத்துடனே வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

2000 ஆம் ஆண்டில் தமது உடமைகளையும், பல உயிர்களையும் இழந்து உடுத்த உடுப்புடன் வெளியேறி அகதிகளாக அலைந்த மக்கள் இன்று சமாதானச் சூழ்நிலை ஏற்படும் என்ற நோக்கில் திரும்பி வந்து தமது வாழ்விடங்களில் குடியமர்ந்து கஞ்சி தானும் குடிக்க விரும்பினாலும் ஸ்ரீலங்கா இராணுவம் அதற்கு அனுமதிப்பதாக இல்லை. தனது கோரப்பற்களைக் காட்டி சமாதானத்தை குழப்ப முயற்சிக்கிறது.

தென்மராட்சியில் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் குடியிருப்புக்களில் இருக்கும் சகல இராணுவ முகாம்களையும் மூடி அங்கிருந்து உடனடியாக வெளியேறி எம் மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர இராணுவம் அனுமதிக்க வேண்டும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை மதியாது மக்களின் உரிமைக்கு மதிப்பளிக்காது மக்கள் இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ள விடாது தொடர்ந்தும் இராணுவம் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-3)

## தையல் இயந்திரங்கள் வழங்கல்

(திருநெல்வேலி)

வடகிழக்கில் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் சங்க பிரதிநிதிகள் 43 பேருக்கு சமூக நலன்புரி அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று யாழ். செயலகத்தில் வைத்து தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. (உ-43,4)

## கொமிசியக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புனித மரியாயின் சேனையின் மாதாந்தக் கொமிசியக் கூட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் தலைவர் சகோதரர் எம்.ஏ.பிரகாசராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

## பெரும் போக நெற்செய்கை பாதிப்பு

(காரைநகர்)

கடந்த வருடம் பருவமழை குறைவாக பெய்தமையினால் பெரும்போக நெற்செய்கையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக காரைநகர்ப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

நெற்பயிர்கள் கதிர் தள்ளும் பருவத்தில் போதிய மழைநீர் இன்மையால் பெருமளவான வயல் களில் வைக்கோல் மட்டுமே அறுவடை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. (உ-246)

## முதலாவதுபெண் மே.முறையீட்டு நீதிமன்றத்தலைவர்

(கோட்டை)

மேன் முறையீட்டு நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக திருமதி ஷிரானி திலக்கவர்த்தன அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றின் முதல் பெண் தலைவரான இவர் கடந்த வெள்ளியன்று ஜனாதிபதி குமாரதுங்கவின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தார்.

நீதியரசர் என்.ஏ.சி.என்.டி.சில்வா முன்னிலையில் ஒரு உச்சநீதிமன்ற நீதியரசராகவும் மேல்நீதிமன்ற நீதபதி ஜி.ஏ.எல்.அபேரட்ண மேன் முறையீட்டு நீதிபதியாகவும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (பி)

## திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு காணிக்கை அன்னை திருவிழா நடைபெறவுள்ளது.

பூசைப்பலிக்கு முன்னதாக மெழுகுவர்த்தி சுற்றுப்பிரகாரம் நடைபெறவுள்ளது. (உ)

## வீடமைப்பு விவகாரம்
## தமிழ் ஊடகவியலாளர்கள் இம்தியாஸுக்கு கடிதம்

(கொழும்பு)

ஊடகவியலாளர்களுக்கான வீடமைப்புத் திட்டங்களில் தமிழ் ஊடகவியலாளர்கள் புறக்கணிக்கப்பட்டு வருவதை, தொடர்ந்தும் அனுமதிக்கக் கூடாது என இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் சங்கம் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்காருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கடந்த காலங்களில் அமுலாக்கப்பட்ட வீடமைப்புத்திட்டங்களில் தமிழ் ஊடகவியலாளர்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் ஊடகவியலாளர்களிற்கான வீடமைப்புத் திட்டத்தில் தமிழ் ஊடகவியலாளர்களிற்கு இடம் கொடுக்கப் படவேண்டும். இது தொடர்பான உரிய நடவடிக்கையை தாங்கள் விரைவில் மேற்கொள்ள வேண்டும்.

பிராந்திய செய்தியாளர் களுக்கான வீடமைப்புத் திட்டங்களும் ஏற்படுத்தப்படவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (உ-10)

## ஈராக் அரசுக்கு இலங்கை ஆலோசனை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு ஈராக் அரசை இலங்கை கேட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் ஆயுத பரிசோதனைக்கு ஈராக் உடன்பட்ட போதிலும், மேலும் பல முக்கிய கேள்விகளுக்கு பதில் தரவில்லை என பரிசோதகர் குழுத்தலைவர் தெரிவித்திருந்தமையினை அடுத்தே இலங்கை அரசு ஈராக்கிற்கு இந்த ஆலோசனையை வழங்கியுள்ளது.

இதேவேளை, ஈராக் அமெரிக்கா இடையே யுத்தத் தவிர்ப்பை மேற்கொள்ள சமாதான விரும்பிகள் முன்வர வேண்டும் என்று ஈராக் பல நாடுகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளது. (உ-10)

## கோட்டை வட்டாரத்தில் குடியமரத் தடையில்லை
### படைத்தரப்பு தெளிவுபடுத்து

(யாழ்ப்பாணம்)

கோட்டை வட்டார மக்கள் எதுவித தயக்கமுமின்றி உடனடியாக மீளக்குடியமரலாம் என யாழ். மாநகர சபை உறுப்பினர் எஸ்.விஜயரட்ணம் தெரிவித்துள்ளார்.

இப்பகுதி மக்களின் மீள் குடியமர்வுக்கு படைத்தரப்பு தடை உத்தரவு விதித்திருப்பதாக வெளியான செய்தி பொய்யானது என்பதை தான் அப்பகுதி இராணுவப் பொறுப்பாளர் லெப்டினன்ட் பியந்தவுடன் நேரில் பேசியதன் அடிப்படையில் உறுதிப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கோட்டை வட்டாரத்தில் மக்கள் மீளக் குடியமர்வதை விரும்பாத சில தீய சக்திகளே பொய்யான தகவல்களைப் பரப்பிவருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (உ)

## இன்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

கடந்த நவம்பர் மாதம் 10ஆம் திகதி நெல்லியடிப்பகுதியில் பொலிஸாரால் பத்திரிகையாளர் வே.தவச்செல்வன் தாக்கப்பட்டமை தொடர்பான விசாரணைக்கு நெல்லியடி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜானக குணதிலக இன்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டுள்ளார். (உ-4)

## நிதி நடவடிக்கைகள்
## திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

நாட்டில் மேற்கொள்ளப்படும் நிதி நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கான அதிகாரத்தை இணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கு வழங்கும் வகையிலான திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது.

இத்திருத்தச் சட்டமூலத்தை நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

நிதி மோசடி செய்தார்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளவும் இந்த திருத்தச்சட்டமூலம் இடமளிக்கும்.(உ-8)

## யுனிசெவ் நிறைவேற்றுப் பணிப்பாளர் பெலமி நாளை யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)



மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று இலங்கை வரவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் மற்றும் கலாசார அமைப்பான யுனிசெவ் நிறைவேற்றுப் பணிப்பாளர் கரோல் பெலமி நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

கடந்த காலங்களில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இடம் பெற்ற போரினால் சிறுவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் பற்றி அறிவதே இவரின் இலங்கைப் பயண நோக்கமாகும்.

இவ்விஜயத்தின் போது பெலமி, ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவ கார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ, கல்வி கலாசார அமைச்சர், சுகாதார அமைச்சர் ஆகியோரையும சந்திக்க வுள்ளார்.

இதேவேளை, நாளையதினம் காலை கிளிநொச்சி செல்லும் இவர், தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளதுடன் கிளிநொச்சி அரச அதிபரையும் சந்திக்கவுள்ளார்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் வரும் யுனிசெவ் நிறைவேற்றுப் பணிப்பாளர், பி.ப 3.15 மணிக்கு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனைச் சந்தித்து சிறுவர் தொடர்பான நிலைமைகளைக் கேட்டறியவுள்ளார்.

வன்னி மற்றும் யாழ். மாவட்டத்திலுள்ள சிறுவர் இல்லங்களையும், யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் திட்டங்களையும் இவர் பார்வையிடவுள்ளதுடன், சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிரான ஊடகத்திட்டம் ஒன்றையும் தனது இலங்கைப் பயணத்தின் போது மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## அரசின் நிர்வகிப்பில் பிழை காண்கிறார் ரத்ன சிறி

(கொழும்பு)

தற்போதைய அரசினால் பொருளாதாரம் சீராக நிர்வகிக்கப்படாத காரணத்தினால் கடன்பத்திரங்களின் விலைப் பெறுமதி அதிகரித்துள்ளதுடன் டொலர், பவுண் ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது ரூபாவின் பெறுமதியும் குறைந்துள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் பிரதமரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரத்னசிறி விக்கிரம நாயக்கா.

நேற்று முன்தினம் பாராளுமன்றில அங்கீகரிக்கப்பட்ட கடன் பத்திர பாதுகாப்பு நாணய மாற்று ஆணைக் குழு நகல் சட்ட மூல திருத்தங்கள் மீதான 2ஆவது வாக்கெடுப்பில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கை ரூபாவின் பெறுமதி ஏனைய நாடுகளின் பணத்துடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவாக உள்ளது. இதனால் கடன் பத்திரங்களின் விலைப் பெறுமதி அதிகரித்துள்ளது என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேன அங்கு உரையாற்றுகையில், தற்போதைய அரசின் பெறுமதி சேர் வரியினால் பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. எனவே பொருள்களின் விலை அதிகரிப்பைக் குறைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். (உ-10)

# மேற்கு வங்க வாகன விபத்தில் 40 பேர் கருகி மாண்டனர்

(கொல்கத்தா)

மேற்கு வங்க மாநிலத்தில் ஒரு தொடரூந்தும், பேருந்தும் நேருக்கு நேர் மோதித் தீப்பற்றிக் கொண்டதில் 40பொதுமக்கள்தீயில் கருகிப் பலியாகியுள் ளதுடன் 15பேர் தீக்காயத்திற்குள்ளானார்கள்.

ஒரிசா மாவட்டத்தில் இருந்து நேற்று முன்தினம் அதிகாலை 5மணியளவில் பயணிகளுடன் கொல்கத்தா நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் பேருந்து எதிரே பொருட்களை ஏற்றிக் கொண்டு வந்த தொடரூந்துடன் மோதியதில் பேரூந்து கவிழ்ந்து தீப்பற்றிக் கொண்டதால் இந்தக் கோர விபத்து நேர்ந்துள் ளது.

மேலும் 55பயணிகளுடன் பேரூந்து சென்று கொண்டிருந்ததெனவும், விபத்து நிகழ்ந்த இடத்திலே 40பயணிகள் பலியாகினர் என்றும் ஒரிசா மாவட்டப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். காயமடைந்த 15பேரும் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இவர்களில் சிலரின் நிலை கவலைக் கிடமாகவுள்ளதென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பி-2)

உலக தரிசனம்

# ஐவரிகோஸ்டுக்கு ஐரோ. உதவி

(அபிட்ஜான்)

உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ஐவரிக்கோஸ்ட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் அடுத்த 5வருடங்களுக்கு 434மில்லியன் டொலர் நிதி உதவியை வழங்கவுள்ளது.

ஐவரிக் கோஸ்டின் உள்ளூர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு பாரிஸில் நடைபெற்ற மேற்கு ஆபிரிக்க நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர் ரொமேனோ புரோடி இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இவர் 172மில்லியன் டொலர்கள் உடனடியாக வழங்கப்படுமெனவும் கூறியுள்ளார். (பி-2)

# மாற்றுகைகள் பொருத்தப்பட்டவர் இயல்பு நிலைக்குத் திரும்புகிறார்

(லியோன்)

மாற்றுக் கைகள் பொருத்தப்பட்டு 3ஆண்டுகள் ஆன நிலையில் மாரத்தான் வீரர் டெனிஸ் சாட்டலியரின் இரு கைகளும் ஓரளவுக்கு வழக்கமான பணிகளைச் செய்யும் நிலைக்கு முன்னேறியுள்ளன. உலகிலேயே இத்தகைய சிகிச்சை செய்து கொண்ட முதல்நபர் இவர்தான்.

யாருடைய உதவியும் இன்றி முள் கரண்டியால்உணவை உண்ண முடிகிறது ஷேவிங் செய்து கொள்ள முடிகிறது. செல்போன் பட்டன்களை அழுத்த முடிகிறது எனறு நிருபர்களிடம கூறினார் டெனிஸ்.

பிஸியோதெரப்பி பயிற்சிகளை தினசரி 2மணி நேரம் செய்து வருவதாகவும் அதனால், தமது கைகள் மெதுவாக இயல்பு நிலைக்கு வருவதாகவும் அவர் கூறினார்.

1996இல் கையால் செலுத்தக் கூடியமாதிரி ராக்கெட்டைச் செலுத்த முயன்றார் டெனிஸ் அது மேலெழும்பிச செல்வதற்கு முன்பாகவே வெடித்ததால் கைகள் துண்டிக்கப்பட்டன.

இதையடுத்து, பிரான்ஸ் நாட்டில உள்ள லியோன் நகரில் உள்ள எடுவார்டோ ஹொரியட் மருத்துவ மனையில் ஜனவரி 2000ல் 17மணிநேர அறுவைச்சிகிச்சை மூலம் இவருக்கு மாற்றுக் கைகள் பொருத்தப் பட்டன. ''நாங்கள் எதிர்பார்த்ததை விட டெனிஸ்"க்குப் பொருத்தப்பட்ட மாற்றுக் கைகள் வெகுவேகமாக செயல்திறன் பெற்று வருகின்றன'' என்று அறுவை சிகிச்சை செய்த டாக்டர் ஜீன்மிசெல் ட்யூபெர்னாட்டு கூறினார். (பி)

# தமிழையும் ஆட்சிமொழியாக இணைத்துக்கொள்ள வேண்டும்

### இந்தி மொழி எதிர்ப்பு நினைவுநாளில் கருணாநிதி

(புதுடில்லி)

இந்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாகத் தமிழையும் இணைத்துக் கொள்ளும்வரை தமது போராட்டம் தொடரும் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற இந்தி மொழி எதிர்ப்புப் போராட்டங்களில் உயிர்நீத்த தியாகிகளின் நினைவாக நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கருணாநிதி இதனைத் தெரிவித்தார்.

அனைத்து வளங்களையும் கொண்ட தமிழ் மொழி ஆட்சி மொழியாக மாற்றிட மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும மேற்கொள்ள வேண்டும் என்றும் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார். (பி-2)

# ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் கத்தியுடன் புகுந்த இஸ்ரேலியர்

(பக்தாத்)

பக்தாத்தில் அண்மையில், ஐ.நா ஆயுத சோதனை குழுவினரின் அலுவலகத்தில் 3கத்திகளுடன் திடீரென ஒருவர் நுழைந்தார்.

அதற்கு அடுத்த 45நிமிடங்களில், 20வயதுடைய மற்றொரு நபர் 'காப்பாற்று' என்று சத்தமிட்டபடி உள்ளே நுழைந்தார்.

இருவரையும் ஐ.நா அலுவலக பாதுகாவலர்கள் கைது செய்து ஈராக் பெர்லிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்த இரு சம்பவங்களும் ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையதா என்பது தெரியவில்லை. விசாரணை நடத்தப்பட்டுவருகிறது என்று ஐ.நா செய்தித் தொடர்பாளர் ஹிரோஈகி தெரிவித்தார்.

ஆயுத சோதனை குறித்து ஐ.நா குழுவினர் அறிக்கை தரவுள்ள நிலையில் நடந்துள்ள இச்சம்பவம் ஐ.நா - ஈராக் இடையே பதற்றத்தை அதிகரிக்கச்செய்யும் என்று கருதப் படுகிறது.

இச்சம்பவத்தின் போது, கத்திகளுடன் நுழைந்தவர் ஈராக் அரசு ஊழியர் என்று அடையாளம் காணபட்டுள்ளது. வாகனங்கள் நிறுத்துமிடத்தின் அருகே உள்ள பக்க நுழைவு வாயில் வழியாக இவர் நுழைந்துள்ளார்.

45நிமிடங்களுக்குப் பிறகு நுழைந்த 20வயது நபர் தனது கையில் குறிப்புப் புத்தகம் வைத்திருந்தார். சோதனை நடத்துவதற்காக ஐ.நா குழுவினர் வெளியே புறப்பட்ட போது அவர்களின் வாகனங்களுக்குக் குறுக்கே நின்றபடி காப்பாற்று என்று சத்தமிட்டார்.

முதல் 2வாகனங்களும் நிற்கவில்லை. 3வது வாகனம் நின்றது அதில் அவர் ஏற அனுமதிக்கப்பட்டார் என அங்கே இருந்த பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர். (பி)

# குளோனிங்முறையில் புதுவகைப் பசுக்கள்

(பாரிஸ்)

இரண்டு வித புரோட்டின் சத்துள்ள பால் தரக்கூடிய, உயிரணுவில் மாற்றம் செய்யப்பட்ட பசுவை, குளோனிங் முறையில் நியூசிலாந்து விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

கோயட்ஸ் லெய்பல் என்பவரின் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு இத்தகைய பசுக்களை உருவாக்கியுள்ளது. மனிதர்கள் குடிப்பதற்கு ஏற்ற பாலை இந்தப் பசுக்கள் மூலம் பெறமுடியும். பீட்டா, கப்பா என்ற இரண்டுவித புரோட்டீன்கள் பாலில் இருந்தால், அதிலிருந்து எடுக்கப்படும் பாலாடைக் கட்டி கெட்டியாவதற்கு உதவும். பாலாடைக் கட்டி தயாரிக்கும் போது தண்ணீர் போன்ற திரவம உருவாகாமல தடுக்க முடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இத்தகைய பசுக்களை பண்ணைகளில் அதிக எண்ணிக்கையில் உருவாக்கினால் பொருளாதார ரீதியில் நல்ல பலன் கிடைக்கும்.

ஆடுகளின் உடலில் குறிப்பிட்ட உயிரணுக்களைச் செலுத்தினால், அவை புரோட்டீன் சத்துள்ள பாலைத் தரும். அந்தப் பாலில் இருந்து அரிய மருந்துகளைச் செய்யலாம்.

இதேவேளை, தேவையற்ற உயிரணுக்கள நீக்கப்பட்ட பன்றிகளையும் குளோனிங் முறையில் உருவாக்கலாம். அத்தகைய பன்றிகளின் உடல் உறுப்புகளை, உடல் நலம் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குப் பொருத்தலாம் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். (பி)






54வது இந்திய குடியரசு தினவிழாவில் அணிவகுப்பில் கலந்து கொண்ட டில்லி மாநகர ரயிலை முதலாவது படத திலும், அங்கு இடம்பெற்ற பெண்களுக்கான கலை நிகழ்ச்சிகளில் ஒன்றை இரண்டாவது புடத்திலும் காணலாம்.

# உடலில் உலோகப் பொருளை கண்டுபிடிக்கும் புதிய கருவி

(லண்டன்)

நாணயக் குற்றிகள், சட்டைப் பின்கள்அல்லது ஊசிகளைச் சிறுவர்கள் விழுங்கிவிடும் சமயங்களில் பெற்றோர்கள் பெரும் மனக்கஷ்டங்களுக்குள்ளாவதும் வைத்தியர்களிடமும் ஆஸ்பத்திரிகளுக்கும் ஓடித் திரிவதும் பொதுவாக இடம்பெறும் நிகழ்வுகள். இவ்வாறான பிரச்சினைகளிலிருந்து பெற்றோருக்கு ஆறுதல் அளிக்கும் கருவியொன்றினை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

நிலக்கண்ணிவெடிகளைக் கண்டுபிடிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள தொழில்நுட்பத்தின் அடிப்படையில் கருவியொன்றை இப்பொழுது பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளார்கள். இக் கருவியானது விழுங்கப்படட அல்லது கையில் காலில் குத்திக் கொள்ளும் உலோகப் பொருட்கள் எவ்விடத்தில் மறைந்துள்ளன என்பதைக் கண்டு பிடிக்கவும் அப்புறப்படுத்தவும் உதவுகின்றது.

கையடக்கமான இக்கருவி மெலோடி என்று பெயரிடப்பட்டுள்ளது (Metal location and detection instrument) உலோகப்பொருள் மறைந்துள்ள இடத்தை அறிந்து கண்டுபிடிக்கும் கருவி என்ற ஆங்கிலச் சொல்லின் சுருக்கமாகும்

மெலோடி (Melodi)மனித உடலில் மறைந்து போகும் தோட்டாக்கள், குண்டுச்சிதைவுகள் போன்றவை இருக்குமிடங்களைத் துல்லியமாகக் கண்டறியவும் அப்புறப்படுத்தவும் கூட இக்கருவி உதவியாக இருக்கும் என்றும் இதனால் ஆஸ்பத்திரிகளுக்காகச் செலவாகும் பல லட்சம் ரூபாய்கள்மிச்சப்படுத்த முடியும் எனறும் இதனைக் கண்டுபிடித்தவர்கள் கூறுகிறார்கள்.

முப்பரிமாணமுறையில் உலோகப் பொருள்கள் இருக்கும் இடத்தை மிகத்துலலியமாகக் கண்டு பிடிக்கக் கூடிய கருவிகளில் இதுவே முதலாவதாகும் என மெலோடி தொழில் நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் போல் டுரான்ட்ஸ் கூறினார்.

மத்திய இங்கிலாந்தில் ஒக்ஸ்போர்ட் நகரல் அமைந்துள்ள மேற்படி நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் பிரிட்டிஷ் அரசாங்க ஆய்வாளர்களோடும் நுட்பவியலாளர்களோடும் இணைந்து இக்கருவியை வடிவமைத்துத் தயாரித்திருக்கிறார்கள்.

சுமார் 5ஆயிரம் பவுண் விலை மதிக்கப்படும் இக்கருவி பிரிட்டனிலும் அமெரிகாவிலும் 2004ஆம் ஆண்டின் இறுதியில் வசதியாகக் கிடைக்குமென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மனிதக்கலங்களில் சிக்குண்டுள்ள உலோகத்துண்டுகளை எக்ஸ்றே கதிர்களைக் கொண்டு கண்டுபிடிப்பதற்குப் பதிலாக இக்கருவி காந்தக் கதிர்களை வெளிப்படுத்தி உலோகத்துண்டு இருக்குமிடத்தைக் காட்டிக்கொடுக்குமாம்.

சிறு கோப்பி அரைக்கும் கருவியின் அளவிலான மெலோடியை இயக்குவதற்கு விசேடபயிற்சி தேவையில்லை. உடலின் மேல்பகுதியில் மெதுவாகத் தடவினால் போதும்.

உலோகப் பொருள் கண்டு பிடிக்கப்பட்டவுடன் கருவியின் திரையில் அது காட்டப்படும். அப்பொருள் இருக்குமிடமும் ஆழமும் ஒரு அம்புக்குறியினால் காட்டப்படும்.

அறுவைச்சிகிச்சைகளின் போது வைத்தியர்கள் எக்ஸ்றே நிபுணர்களின் உதவிக்குக காத்திருக்கமல் இக்கருவியின் உதவியுடன் மிக எளிதாக சிகிச்சைகளை முடித்துக் கொள்ள முடியும் என்று கூறப்படுகின்றது. (பி)

## யாழ். குடாநாட்டில் நல்வாழ்வுடன் கூடிய

# சமாதானம் நிலவ வேண்டும் என்பதே ச. செ .சங்கத்தின் எதிர்பார்ப்பு

## பத்திரிகையாளர் சந்திப்பில் விளக்கமளிப்பு

(திருநெல்வேலி)

**ஏ.-9 வீதியை 24 மணிநேரமும் திறப்பதற்கு நாம் தயாராக உள்ளோம். இது விடயம் தொடர்பாக அரசு - புலிகள் ஆகிய இருதரப்பும் எம்மை உத்தியோக பூர்வமாக கேட்கவில்லை.**

இவ்வாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். அலுவலகத்தில் நேற்றுப் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இச் சந்திப்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கதரப்பில், செயற்கை அவையவங்கள் நிபுணர் அன்ரூ ஸ்மித், தலைமைச செயலகச், செயலாளர் சிசில் க்ரோஸ் மற்றும் யாழ். கிளையின் புதிய தலைவர் அன்ரூ பீற்றர் ஓர்பி ஊடகப் பொறுப்பாளர் டானிலிஷ்சி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில் மேலும் அவர்களால் தெரிவிக்கப் பட்டதாவது.

ஏ-9 பாதை 24 மணிநேரம் திறக்கப்படுவதில் எம்து சங்கம் எந்தவித முட்டுக்கட்டையையும் போடவில்லை.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கேட்டுக் கொண்டால் நாங்கள் இது தொடர்பில் பரிசீலிக்கத் தயாராக உள்ளோம்.

பாதை 24 மணி நேரமும் திறக்கப்படின் மின்சார வசதி செய்யப்பட வேண்டும்,

ஞாயிற்றுக் கிழமைகளிலும் பாதையைத் திறக்க நாம் தயார் ஆனால், 24 மணிநேரமும் பாதை திறக்கப்படின் அங்கு எமது சேவை பெரியளவில் தேவைப்படாது.

உயர் பாதுகாப்பு வலயம், மீள்குடியேற்றம் தொடர்பான பிரச்சினைகளில் நாங்கள் தலையிடமாட்டோம். அது அரசியல் தொடர்பானது. மனிதாபிமான உதவிகள் மட்டுமே எம்மால் மேற்கொள்ளப்படும்.

வலிகாமப் பகுதியில் உள்ள வீடுகளை பார்வையிடுவது கண்காணிப்புக்குழுவுடன் தொடர்பான விடயம்.

மீளக்குடியமரும் மக்களின் பாதுகாப்பிற்கு இரு தரப்பும் கேட்டுக்கொண்டால் நாங்கள் உதவுவோம்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் நடமாடும் சேவைக்கு எம்மால் உதவ முடியாது.

போர் நிலைமையின் போதே இத்தகைய உதவிகளை வழங்க முடியும். இத்தகைய சேவைகளுக்கு அசாங்கம் உதவவேண்டும்.

எமது சேவைகளை தெரியப் படுத்த ஊடகங்களின் பணி இங்கு மட்டுமல்ல உலகளாவிய ரீதியில் தேவையானது.

யாழ்ப்பாணத்திற்கு சமாதானமும் நல்வாழ்வும் கிடைப்பதே எமது சங்கத்தின் எதிர்பார்ப்பு. இங்கு சமாதானம் முழுமையாக ஏற்படும் போது இங்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம மட்டுமே இயங்கும் என்று தெரிவித்தனர்.

(உ-43-4)

# தொ.சங்க பிரதிநிதிகள் வாஷிங்டன் செல்வர்

(கொழும்பு)

தொழிற் சங்க பிரதிநிதிகளைக் கொண்ட குழுவொன்றை வாஷிங் டனுக்கு அனுப்பி, அரச உடமைகளை தனியார் மயப்படுத்தும் தமது திட்டம் குறித்து பேச்சு வார்த்தை நடத்துவது தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

பிரதமரின் சார்பில் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன, தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி, காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆகியவற்றைத் தனியார் மயப்படுத்தும் அரசின் திட்டத்தை தொழிற்சங்கங்கள் கண்டித்து வருகின்ற நிலையில் மேற்படி வாஷிங்டன் பயணம் முக்கியத்துவம் பெறுகின்றது.

(உ)

# சமாதான முன்னெடுப்புக்குத் தேவையான தார்மீக உதவிகளை பிரி. வழங்கும்

## இலங்கை வந்துள்ள வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகள் உலகுக்கு ஓர் பாடமாக விளங்கும இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுள் எமது நாடு· இரண்டாவது பெரிய



உதவிவழங்கும் நாடாக விளங்கும் என பிரிட்டிஷ் வெளிவிவகார அலுவல்கள் அமைச்சர் மைக் ஒபிறியன் தெரிவித்துள்ளார்.

இல்ங்கை தொடர்பிலான தமது நிலைப்பாடு குறித்து அவர் மேலும் கூறுகையில்,

இவ் ஆண்டில் 20 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களை உதவியாக வழங்கவுள்ளோம்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் ஆரம்பத்திலிருந்து இருபக்கத்தினரும் பாரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளனர்.

இப்பிரச்சனைக்கு நீடித்து நிலைக்கக்கூடிய தீர்வைக் காண்பதற்கான ஒரு நேர்மையான சந்தர்ப்பம் இன்று கிடைத்துள்ளது.

சமாதான முயற்சிக்கு தேவையான அரசியல் நடைமுறை, தார்மீக ஆதரவு என்பவற்றை வழங்க பிரிட்டிஷ் தயாராகவுள்ளது.

புனர்வாழ்வு, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான எமது உதவிகள் சகல மக்களுக்கும் கிடைக்கக்கூடிய வகையில் செயற்பட்டு சமாதான முயற்சிகள் மீது நம்பிக்கையை ஏற்படுத்தவுள்ளோம்.

இருநாடுகளுக்கும் இடையிலான 19 வருடகால இணைப்பு முரண்பாடுகளின் மத்தியிலும் விருத்தியடைந்து வந்துள்ள துடன் இவ் முரண்பாடுகளிலிருந்து விடுபட முயற்சிகள் எடுக்கவுள்ளோம்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்புகள் மூலமாகவும் இலங்கையை மீளக் கட்டியெழுப்பமுடியும்.

மேலும் எமது அரசே முன்னணி ஐரோப்பிய முதலீட்டாளராகவும், திட்டங்களின் பெறுமதியின் அடிப்படையில் இரண்டாவது இடத்திலும் என்று குறிப்பிடார்.

(உ-3)

# அ. அ. தொலைத்தவர்கள் மீள்குடியமர்வு கொடுப்பனவு பெற முடியாது தவிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களில் தேசிய அடையாள அட்டைகள் இல்லாதவர்களுக்கு அரசினால் வழங்கப்படவுள்ள மீள்குடியமர்வுக் கொடுப்பனவாகிய 25 ஆயிரம் ரூபா வழங்கப்படமாட்டாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திடீர் அறிவிப்பின் காரணமாக மீளக்குடியமர்ந்துள்ள பல குடும்பங்கள பாதிக்கப்படக்கூடிய நிலை தோன்றியுள்ளது.

தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்தம் மற்றும் இடம்பெயர்வைத் தொடர்ந்து பல குடும்பங்கள் தமது தேசிய அடையாள அட்டைகளைத் தொலைத்துவிட்டன இருப்பினும், அவற்றினைப பெறுவதற்குரிய விண்ணப்பங்களைச் செய்யாமல் அசட்டையீனமாக இருந்துள்ளனர்.

இத்தகையவர்களிடம் படையினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் இருக்கின்றபோதிலும் கூட, இக்குறித்த கொடுப்பனவைப் பெறுவதற்கு அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் கூறப்படுகிறது.


தென்மராட்சி பிரதேசத்திலுள்ள 60 கிராமசேவையாளர் பிரிவுகளிலும் தேசிய அடையாள அட்டைகளைத் தொலைந்துவிட்ட பல பாமரமக்கள் இருந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இத்தகைய பாதிக்கபபட்ட குடும்பங்கள் தமக்கான மீளக்குடியமர்வுக் கொடுப்பனவைப் பெறுவதற்கு ஏதாவது மாற்று வழிகள் இருக்கின்றனவா என ஆராயும் படி அவ்வப்பகுதிக் கிராம சேவையாளர் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(உ-77)

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு





செயற்கை அவயவ உற்பத்தி நிபுனர் அன்ருட் சிமித், முன்னாள் யாழ். வதிவிடப்பிரதிநிதி சிசில் க்றோஸ் புதிய வதிவிடப்பிரதிநிதி ஹென்ஸ் பீற்றர் ஹென்றீச் தகவல்பரிமாற்றத் துறை அதிகாரி டனா லிஸ்ஸீ ஆகியோர் பத்திரிகையாளர்களுடன் உரையாடுகின்றனர்.



புதிதாக வடிவமைக்கப்பட்ட செயற்கைக்கால் பற்றிய விளக்கத்தை அளிக்கிறார் அன்ருட் சிமித். படங்கள் : பவன்

# புலிகள் அமைப்பை அங்கீகரிக்கக் கூடாது

## சிஹல உறுமய சீற்றம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை சட்டரீதியான அமைப்பாக இலங்கை அரசு அங்கீகரிக்க கூடாது என சிஹல உறுமயக் கட்சி யின் உதவிப் பிரசாரச் செயலாளர் உதயபிராவ்கம்மன் கேட்டுளளார்.

இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிடுகையில்,

அண்மையில் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் சிறப்பு பிரதிநிதியை ஜெனிவாவில் சந்தித்த பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை தனியான படை அமைப்பாக ஏற்றுக்கொள்ள இலங்கை அரசு தயாராக உள்ளது எனக் கூறியிருந் தார்.

இதனை நாம் அனுமதிக்கமாட்டோம் பயங்கரவாத அமைப்பான தமிமீழ விடுதலைப் புலிகளை சட்டரீதியான அமைப்பாக இலங்கை அரசு ஒருபோதும அங்கீகரிக்க கூடாது என்று தெரிவித்துள்ளார். (உ-10)

# பேசப்படும் விடயங்கள் குறித்து முஸ்லிம் தரப்பு கூடி ஆராயும்

(கொழும்பு)

ஐந்தாம் கட்டப் பேச்சுக்களின் போது முஸ்லிம் மக்களின பிரச்சினைகள் தொடர்பாக பேசப்பட வேண்டிய விபரங்களை அறிந்து கொள்வதற்கான மாநாடு இம் மாத ஆரம்பத்தில் நடைபெறவுள்ளது.

ஒலுவில் பிரதேசத்தில் அமைச்சர் ரவூப்ஹக்கீம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இம்மாநாட்டின் போது, சமாதான முயற்சிகளில் முஸலிம் சமூகத்தவரின் பங்களிப்பு எவ்வாறு எந்தவகையில் அமைய வேண்டும்? அவர்களின் பொறுப்புகள் என்ன? என்பன குறித்தே ஆராயப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது தனித் தரப்பாக கலந்து கொள்வது பற்றியும் இம்மாநாட்டில் ஆராயப்படவுள்ளது. (உ-8)

# நாவலர் மணி மண்டபத்தில் யோகாசனப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யோகப்பயிற்சி, தியானப் பயிற்சி ஆகியவற்றின் முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொண்டு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் பிராந்திய அலுவலகத்தினால் யோக, தியானப் பயிற்சி வகுப்புகள் நாவலர் மணி மண்டபத்தில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள் ளன.

இந்தியாவின் பெங்களூர் நகரில் உள்ள யோக கேந்திராவில் பயிற்சி பெற்ற ஆசான் நமசிவாயம் சிவனேஸ்வரராஜா (சிவா) இப் பயிற்சியினை நடத்தவுள்ளார்.

திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் மாலை 5.30 முதல் 7.00 மணி வரை பயிற்சி வகுபபுகள் நடைபெறவுள்ளது.

பயிற்சியில் பங்குபற்ற விரும்புவர்கள் தங்கள் பெயர்களை நாவலர் மண்டபத்தில் உள்ள அமைச்சின் அலுவலர்களிடம் சென்று பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# கட்டுவன் ஐயப்பன் ஆலய விக்கிரகங்கள் திருட்டு

(ஏழாலை)

கட்டுவன் ஐயப்பன் ஆலயத்தில் இருந்து பெறுமதியான விக்கிரகங்கள் களவாடப்பட்டுள்ளன.

மேற்படி ஆலயத்தில் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட பிள்ளையார், முருகன், விஷ்ணு ஆகிய விக்கிரகங்களே கடந்த திங்கட்கிழமை இரவு களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இவ்வாறு திருடப்படும் விக்கிரகங்கள் தென் பகுதிக்கு கடத்திச் செல்லப்பட்டு பெரும் தொகை பணத்திற்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (உ- 12)

# படையினர் தலையீட்டால தெல்லி. ஆஸ்பத்திரிச் சூழல் துப்புரவுப் பணிகள் இடைநிறுத்தம்

(ஏழாலை)

தெல்லிப்பழை வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் துப்புரவுப் பணிகளை தொடர்ந்தும் மேற்கொள்ள இராணுவத்தினரால் அனுமதி மறுக்கப்பட் டுள்ளதாகக் தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பழை வைத்தியசாலையை மீண்டும் சொந்த இடத்தில் இயங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளதையடுத்து அந்தப் பகுதியில் துப்புரவுப்பணியை வலி வடக்கு பிரதேசபை, யாழ். செயலகம் ஊடாக மேற்கொண்டு வந்தது.

தற்பொழுது பிரதேசசபை ஊழியர்கள் தொடர்ந்தும் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள இராணுவத்தினரால் ஒரு வாரத்துக்குமேலாக அனுமதி மறுக்கப்பட்டுள்ளதனால் துப்புரவுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-12)

# வடக்கு-கிழக்கில் போஷாக்குத் திட்டம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்டம் வடக்கு கிழக்கில போஷாக்குத் திட்டத்தை அமுல்படுத்தவுள்ளது.

வடக்கு-கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு 'இந்ததிட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து மிக்க உணவுகள் வழங்கப்படவுள்ளன.

இவ்அமைப்பு அண்மையில் மேற்கொண்ட ஆய்வுகளின் படி வடகிழக்கின் பல பிரதேசங் களைச் சேர்ந்த மாணவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப் பட்டுள்ளது தெரியவந்துள்ளதையடுத்தே இந்தத் திட்டம் அமுலாக் கப்படுவதாக உலக உணவுத் திட்டத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.(உ- 8)

# மதுபானம் விற்பனை மக்கள் விசனம்

(ஊர்காவற்றுறை)

அனலைதீவில் பல இடங்களில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்பனை செய்யப்பட்டுவருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கட்டுப்பாடின்றி பல இடங்களிலும மதுபானம் விற்பனை செய்யப்படுவதால் சமூகச் சீரழிவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் இது குறித்து எவரும் உரிய நடவடிக்கை எடுக்க முன்வருவதில்லை எனவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (உ-75)

# மாணவனின் கைமுறிந்தது

(ஊர்காவற்றுறை)

உயரம் பாய்தல் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பாடசாலை மாணவன் கை முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அனலைதீவைச் சேர்ந்த சி. றெசாந்தன் (வயது 12) என்ற சிறுவனே விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு பாடசாலை மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேலையில் கை முறிந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுளளார். (உ-75)

# விளையாட்டுப் போட்டி

(உரும்பிராய்)

இளவாலை மெய்கண்டான் மத்திய மகாவித்தியாலய வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று பி.ப 2.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் அ. பேரம்பலம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. சச்சிதானந்தம், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய உடற்கல்வி முதன்மை ஆசிரியர் மு.லோகநாதன் ஆகியோர் கலந்து கொளளவுள்ளனர். (உ-215)

* * *

(உரும்பிராய்)

வயாவிளான் மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 2.30 மணிக்கு உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் வித்தியாலய அதிபர் க. கனகராஜா தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ், சிறப்பு விருந்தின்ராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம், கௌரவ விருந்தினர்களாக மாநகரசபை உறுப்பினர் ச. அரவிந்தன், வித்தியாலய பழைய மாணவர் இ. கனகலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-215)

# ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தி வரும் ஆனமீகச் சொற்பொழிவுத் தொடரில் இம்முறை, 'கந்தரநுபூதி' எனும் விடயம் பற்றி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி ஆசிரியர் ஜெ. கோகலே சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ)

# விருது வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சிரித்திரன் சஞ்சிகையின் ஆசிரியர் அமரர் சிஞானசுந்தரம் நினைவாக 2001ஆம் ஆண்டு வெளியான தமிழ்ச் சிறுகதை நூல்களுக்கு விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (உ)

# வாழ்க்கைச் செலவைக் குறைக்கத்திட்டங்கள

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான பல்வேறு திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்துவது தொடர்பான திட்டங்களை தயாரித்து வரும் குழு நேற்றுக் கூடிய போதே இத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எரிவாயு உட்பட அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தை எதிர்காலத்தில் மேலும் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப் படவுள்ளது.

எவ்வாறாயினும் இது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும் போது திறைசேரியின் கணிப்பீடுகளும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக கரு மேலும் தெரிவித்துள்ளார். (உ -8)

# வரவேற்புப் பலகை விவகாரம் தொடர்கதையாகிறது

(கொழும்பு)

மட்டக்களப்பு பிள்ளையாரடிச் சந்தியில் மட்டக்களப்பு பல்கலைக்கழக மாணவர்களால் நடப்பட்ட "வீரம் விளைந்த மண் வரவேற்கிறது" என்ற வாசகம் பொருந்திய வரவேற்புப் பலகையை பொலிஸார் நேற்று அதிகாலை மீண்டும் அகற்றினர்.

கடந்த திங்கட்கிழமை அம்மாவட்டத்துக்கு விஜயம் செய்த விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட பிள்ளையாரடிச் சந்தியில் நடப்பட்டடிருந்த மேற்படி பெயர்ப் பலகையை அகற்றுமாறு பொலிஸாருக்கு விடுத்த உத்தரவை அடுத்து இப் பெயர்ப் பலகை அகற்றப்பட்டது.

இதனைக் கண்டித்து மட்டக்களப்பு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் மு.ப. 10 மணிவரை ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன் இப்பெயர்ப் பலகையை மீண்டும் இருந்த இடத்தில் நாட்டினர்.

மாணவர்களால் நடப்பட்ட பலகையையே பொலிஸார் நேற்று மீண்டும் அகற்றியுள்ளதுடன், அதனை மட்டக்களப்பு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (உ-8)

# நீர் காப்பு ஆண்டாக 2003ஐ பிரகடனப்படுத்துக!

(கொழும்பு)

"நீரைப் பேணிப்பாதுகாக்கும்" ஆண்டாக இவ் ஆண்டை அரசாங்கம் பிரகடனம் செய்ய வேண்டும் என நீர்வள முகாமைதத்துவ அமைச்சர் காமினி விக்கிரம பெரேரா ஆலோசனை தெரிவித்துள்ளார்,

நீரைப் பேணிப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள் விரைவில் அமுல் செய்யப்படுமானால், நீரை சிக்கனப்படுத்தலாம்.

குறைந்தளவு நீரைப் பயன்படுத்தி கூடுதலான அறுவடைகளைப் பெறுவதற்கு விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும்.

நாட்டில் பல பிரதேசங்களில் நீர்த்தட்டுப்பாடு நிலவுகின்ற அதேவேளை, அளவிற்கதிகமாக நீரைப் பயன்படுத்தி நீர்விரயம் செய்வோரும் பலர் இருக்கின்றனர்.

இவ்வாறு நீர் வீண்விரயம் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

# தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சொந்த இடத்தில் இயங்கும்

(ஏழாலை)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை தெல்லிப்பழை வைத்தியசாலைப் பகுதியில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தெல்லிப்பழை புற்று நோயாளர் வைத்தியசாலை மீண்டும் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளதையடுத்து மல்லாகத்தில் கடந்த 5 வருடங்களாக இயங்கி வந்த தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை இவ் வைத்தியசாலையின ஒரு பகுதியில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து, பணிமனையின் பொருட்கள், தளபாடங்கள் என்பன தெல்லிப்பழைக்கு எடுத்துச செல்லப்படுகின்றன.

மேலும் தெல்லிப்பழை புற்று நோயளர் வைத்தியசாலை தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் இயங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (உ-12)

# பெப்ரவரி 10 ஆம் திகதி யாழ். பொது நூலகம் திறப்பு

(தென்மராட்சி)

புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் தமிழா் தேசியக் கூட்டமைப்பின் நாடளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான வீ. ஆனந்தசங்கரி எதிர்வரும் 10 ஆம் திகதி வைபவரீதியாகத் திறந்து வைக்கவுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தின் முதல்வர் செல்லன் கந்தையன் தலைமையில் இத்திறப்புவிழா நிகழ்வுகள் இடம்பெறவுள் ளன.

1981ஆம் ஆண்டு தீயிடப்பட்ட இப்பொது நூலகம் 22 வருடங்களின் பின் மீண்டும் அதே இடத்தில் செயல்பட ஆரம்பிப்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூலகத்தின் புனரமைப்புக்குரிய நிதியினை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு கட்டம் கட்டமாக வழங்கியிருந்தமை தெரிந்ததே. (உ-77)

# பாடசாலைகளில் தினமும் தேசிய கீதம்

(கொழும்பு)

படசாலைகளில் எதிர்வரும் மாதம் 6ஆம் திகதி முதல் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தேசியக் கொடியை உரிய முறையில் பயன்படுத்துவது, தேசிய கீதத்தை முறையாக இசைப்பது குறித்து மாகான மற்றும் வாலயக்கல்வி அதிகாரிகள் கல்வி ஆலோசகர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளுமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.(உ-8)

## சிறுவிளம்பரம்

### சோதிட வகுப்புக்கள்

சோதிடப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.தொடர்புமுகவரி-சண் மாஸ்ரர் 41,சிவப்பிரகாசம் வீதி, வண்ணை,யாழ்ப்பாணம். (6497)


## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில்'JEAN LOUP HUBRT இயக்கிய பிரெஞ்சு மொழித் திரைப்படமான AFTERTHTWAR' தெலுங்கு போராட்டம் குறித்த ஆவணப்படமான 'A STATE OF KILLING' என்ற வீடியோ படக்காட்சி எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10மணிக்கு புவியியல்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் பங்கு பற்றலாம் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

## இந்தியாவிலிருந்து ஊசி மருந்து

(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்டத்தில் பரவிவரும் வைரஸ் காய்ச்சலைக்கட்டுப்படுத்தும் முகமாக இந்தியாவில் இருந்து 12 லட்சம் தடுப்பூசிகள் கொண்டு வரப்படவுள்ளன.

இம்மாவட்டத்தில் வைரஸ் காய்ச்சலினால் 21 பேர் உயிரிழந்துள்ளதுடன், 7 பேர் ஜப்பானிய மூளைக் காய்ச்சலினால் உயிர் இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(உ-10)

## பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தும்பளை புனித லூர்த்து அன்னை திருத்தலப்பெருவிழா எதிர்வரும் மாதம் 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் அரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் இடம்பெறவுள்ளது. (உ)

# வைத்தீஸ்வரா வித்தியாலயத்தை வளமாக்கிய அதிபர் ச. அம்பிகைபாகன் சிறந்த கலாரசிகர்



சுன்னாகத்தைப் பிறந்தகமாகவும் மல்லாகத்தைப் புகுந்தகமாகவும், வாழ்வகமாகவும் கொண்ட ச. அம்பிகைபாகன் தன் பன்முகப் பணிகளை இந்த இரண்டு ஊர்களுக்கென மட்டுப்படுத்தாமல் அவற்றின் எல்லைகளை நாளுக்கு நாள் நீட்டிக் கொண்டும், அகலித்துக் கொண்டும் இருந்தார். இவர் கல்லூரி அதிபராகவும் காந்தியவாதி சமூகத் தொண்டன் எழுத்தாளர் கலாரசிகராகவும் விளங்கினார். இவருடைய சேவைகள் அனைத்திற்கும் கேந்திரமாக அமைந்தது யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயம். 1935 ஆம் ஆண்டில் அவ்வித்தியாலயத்தின் அதிபராக அம்பிகைபாகன் நியமிக்கப்பட்ட போது கிட்டத்தட்ட 150 மாணவர்களையும் 7 ஆசிரியர்களையும் கொண்ட கனிஷ்ட இடைநிலைப் பாடசாலையாகவே அது விளங்கியது. முப்பத்து மூன்று ஆண்டுகளாக அதிபராகப்' பணியாற்றி 1968 ஆம் ஆண்டில் அவர் ஓய்வு பெற்ற போது,1500 மாணவர்களையும் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களையும் கொண்ட முதலாந்தரக் கல்லூரியாக அது திகழ்ந்தது. நீண்ட பாரம்பரியத்தையும் போதிய நிதி வசதியையும் கேட்டாலும் கேட்காவிட்டாலும் தாமாகவே முன்வந்து பல்வேறு உதவிகளையும், வசதிகளையும் செய்யும் மனப்பாங்குமுடைய ஏராளமான பழைய மாணவர்களையும் ஆட்சியிலும் அதிகாரத்திலும் இப்போரின் ''கடைக்கண் பார்வை''யையும் தமக்காக்கிக் கொண்டு விளங்கிய பிரபல கல்லூரிகள் பலவற்றின் மத்தியில்'ஏழை மாணவர்களுக்கென' உருவாக்கப்பட்ட ஒரு வித்தியாலயத்தை கட்டி எழுப்புவது என்பது கடினமான காரியம் என்பதைப் பலர் அறிவார். எனினும் அறிவு, ஆற்றல்,அன்பு, அரவணைப்பு, அர்ப்பணிப்பு, இலட்சியப்பிடிப்பு, இடையறா முயற்சி போன்ற தன் ஆளுமையாலும்,

**'இதனை இதனால் இவர் முடிப்பன் என்றாய்ந்து**
**அதனை அவன் கண் விடல'**

என்ற குறளின் பொருளை நன்குணர்ந்து கடினமான இப்பணியை மிகச் சுலபமாகவே இவர் செய்து முடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மதமும் கலை கலாசாரமும்

சைவப்பிள்ளைகளுக்குச் சைவச் சூழலிலேயே கல்வி கற்பிக்கப்படல் வேண்டும் என்ற நாவலர் பெருமானின் நல்லுபதேசத்திற்கமைய வித்தியாலயம் பிரதான மண்டபத்தில் ஆடல் வல்லான் அம்பிகை ஆகியோரின் விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்வித்தார். நடராஜப் பெருமானுக்கும் அம்பாளுக்கும் விதி முறைப்படி பூஜை நடத்தப்பட்டு மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் நிறைவேறிய பின்னரே பாட சாலைகளின் அன்றாட பணிகள் தொடங்கப் பட வேண்டும் என்பதில் இவர் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

இவ்வித்தியாலயத்திற் கல்வி கற்ற முஸ்லிம் மாணவர்களுக்கு இஸ்லாமிய மத போதனை செய்வதற்கு உரிய ஏற்பாடுகளை இவர் செய்தார்.

வைத்தீஸ்வரா வித்தியாலயத்தை இலக்கிய கலை கலாசார கேந்திரமாக ஆக்கியவரும் இவரே. சமய இலக்கிய மகாநாடுகள் இசை,நடன நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடத்துபவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் வகையில் வித்தியாலய மண்டபத்தில் அவற்றை நடத்துவதற்குச் சகல வசதிகளையும் இவர் செய்து கொடுத்தார். இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் போன்றோருள் வைத்தீஸ்வரா வித்தியாலயத்துக்கு விஜயம் செய்து மாணவர்கள் மத்தியிலே தம் திறமையை வெளிப்படுத்தாதவர் ஒருவராவது இருப்பாரா என்பது சந்தேகமே.தெ. பொ.மீனாட்சி சுந்தரனார்,அ.ச. ஞானசம்பந்தன்,கல்கி கிருஷ்ணமூர்த்தி, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளைபெரியசாமித் தூரன் தீபம் பார்த்தசாரதி, மாயாவி, மகரம், ஓவியமணி[illegible] வசந்தகுமாரி முதலிய பலரை நேரில் காணும் வாய்ப்பை வைத்தீஸ்வரா மாணவர்களுக்கு இவர் ஏற்படுத்திக் கொடுத்தார்.

## மறைந்தார் மாண்பு

### கலைவிழாக்கள்

அம்பிகைபாகன் அவர்களின் பதவியோ, உதவியோ இன்றி எந்தவொரு விழாவோ, மகாநாடோ யாழ்ப்பாணத்தில் நடைபெறாது எனப்பலர் நினைக்கும் அளவிற்கு இவர் இன்றியமையாதவராக விளங்கினார்.

சென்னைத்தமிழ் வளர்ச்சிக் கழகம் யாழ்ப்பாணத்தில் நடத்திய தமிழ்விழா, நீதியரசர் தம்பையா தலைமையில் அமைக்கப்பட்ட கம்பன்கழகம் (கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களால் பிற்காலத்தில் அமைக்கப்பட்ட கம்பன்கழகம் வேறு) வைத்தீஸ்வராவில் நடத்திய கம்பன் விழா, சென்னை சைவசித்தாந்த சமாசம் யாழ்ப்பாணத்திலும் திருக்கேதீஸ்வரத்திலும் நடத்திய சைவமகா நாடுகள், வித்துவ சிரோன்மணி சி.கணேசையர் பாராட்டுவிழா, அச்சுவேலி குமாரசாமிக்குருக்கள் பாராட்டு விழா, சைவப்புலவர் ந. சண்முகரத்தினம் பாராட்டுவிழா, 'லயஞான குபேரபூபதி' வி. தெட்சணாமூர்த்தி பாராட்டு விழா போன்றவற்றின் வெற்றிக்கு அயராது உழைத்தவர் அம்பிகைபாகன்.

### கல்விப்பணிகள்

பேராதனைப் பல்கலைக்கழக மூதவை உறுப்பினராக வடமாகாண ஆசிரியர் சங்கம், வடமாகாண அதிபர்கள் சங்கம் போன்றவற்றின் முக்கிய நிர்வாகியாக இருந்து கல்விக்கும், கல்வியாளர்களுக்கும் இவர் ஆற்றிய சேவைகள் பல. யாழ். சைவ பரிபாலன சபை, திருக்கேதீஸ்வர திருப்பணிச் சபை, ஆரியதிராவிடபாஷாபிவிருத்திச் சங்கம் போன்றவற்றின் மூலம் இவர் செய்த பணிகள் அளப்பரியன.

ஈழகேசரி,வீரகேசரி, இந்து சாதனம்,ஈழநாடு,கல்கி,கலைமகள், கிராமஊழியன் முதலிய ஈழத்து இந்திய சஞ்சிகைகள் காலத்துக்

**சி.சிவசரவணபவன் எம்.ஏ**
**(முன்னைநாள் அதிபர் யா/வைத்தீஸ்வராக்கல்லூரி)**
**(1984-1993)**

குக்காலம் வெளிவந்த விசேட மலர்கள், சென்னை, தமிழ்வளர்ச்சிக்கழகம் வெளியிட்ட 'கலைக்களஞ்சியம்' போன்றவற்றில் இவர் எழுதிய ஆழமும் தெளிவும் ஆதார பூர்வமான தகவல்களும் நிறைந்த கட்டுரைகளும் விமர்சனங்களும் ஈழத்துப் பேனா மன்னர் வரிசையில் இவருக்கு சிறப்பிடத்தை அளித்தன.

வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் பழுதுற்ற நிலையில் இருந்த திறந்த வெளியரங்கை பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் புதுப்பித்து ''அம்பிகைபாகன் அரங்கு'' எனப்பெயர் சூட்டி, அவரின் சகாக்களான வைரமுத்து, சீனிவாசகம் ஆகியோரைக் கொண்டு திறந்து வைக்க என்னால் முடிந்ததை நினைத்து நான் இன்னும் திருப்தியும் பெருமையும் அடைகின்றேன்.

# யாழ். கூ.துறை அபிவிருத்தி தொடர்பில் ஆராய நோர்வே வல்லுநர் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் கூட்டுறவுத் துறை அபிவிருத்தி சம்பந்தமாக ஆராய்வதற்கு நோர்வேயின் கூட்டுறவுத்துறை வல்லுநர் பேர்டீலன் அடுத்தமாதம் 5ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

பேர்டீலன் தனது யாழ் வருகை தொடர்பாக யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைத்தலைவர் பெ. கனகசபாபதிக்குத் தொலைநகல் ஒன்றை அனுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ள பேர்டீலன் யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை உத்தியோகத்தர்களைச் சந்திப்பதுடன் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், மூளாய் கூட்டுறவு வைத்திய சாலை, மீன்பிடி கூட்டுறவுச்சங்கம், கைத்தொழில் கூட்டுறவுச்சங்கம், யாழ்ப்பாணத்தில் உள்ள அகதி முகாம்கள் ஆகியவற்றுக்குச் சென்று நிலைமைகளை நேரில் அவதானிக்கவுள்ளார். (வ)

## —20ஆயிரம் இலங்கையர்க்கு—

# வடகொரியாவில் வேலை வாய்ப்பு

(கொழும்பு)

இவ்வருடம் 20 ஆயிரம் இலங்கையர்க்கு வடகொரியாவில் வேலை வாய்ப்புப் பெற்றுக்கொடுப்பதற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்காவின் பணிப்பின் பேரில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் சுஸந்த பெர்னாண்டோ அந்நாட்டு கைத்தொழில் அமைச்சர்களுடனான பேச்சு வார்த்தை நடத்தியதை அடுத்தே 20 ஆயிரம் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க வடகொரியா முன்வந்துள்ளது.

வேலை வாய்ப்புக்காக வட கொரியாவுக்கு அனுப்பப்படவுள்ள இலங்கையர்களுக்கு அந்நாட்டின் மொழியையும்தொழில்கள் சம்பந்தமான அடிப்படைப் பயிற்சியையும் வழங்க வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது. (உ-8)

# ஐ.நாவின் சட்டத்திற்கு அமைய ஈராக் செயற்பட வேண்டும்

## இலங்கை அரசு கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக ஈராக் செயற்பட வேண்டுமென்று இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதப் பரிசோதகர்கள் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையை பரிசீலணை செய்த பின்பே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அறிக்கையை இலங்கை வெளி விவகார அமைச்சு பரிசீலனை செய்துள்ளது.

ஆயுதப்பரிசோதனையின் போது ஈராக் ஆதரவு வழங்கியுள்ள போதும் சில கேள்விகளுக்கு விடை காணப்படாமல் இருப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் 1441வது சட்ட வரைபுக்கு அமைவாக ஈராக் செயற்பட வேண்டும் என்றும், யுத்தத்தினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை அது கருத்தில் கொள்ள வேண்டுமென்றும் இலங்கை வேண்டுகோள் விடுத்துள்ளது.(த)

# உலகவங்கி நிதி உதவியுடன் நீர்ப்பாசனத்துறை மேம்படுத்துகை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நீர்ப்பாசனத்துறை மற்றும் விவசாயத்துறைகளை மேம்படுத்தப்படவுள்ளதாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நடவடிக்கைகளுக்கென உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் சுமார் 11 கோடி ரூபா பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் வட-கிழக்கு மாகாண சபைகள் மூலம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மன்னார், அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஆயிரத்து200கிலோ மீற்றர் தூரமுள்ள கால்வாய்களும் சுமார் 400 சிறிய குளங்களும் இந்த வகையில் புனரமைக்கப்படவுள்ளன. (உ-8)

# விடுதலைப்புலிகளுக்கு சவால் விடுக்கிறார் அன்வர் இஸ்மாயில்

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப்புலிகள் வரிவ சூலிப்பதிலும், ஆட்கடத்தலிலும் ஈடுபடுவதில்லை என்பதை அவர்கள் நிரூபித்துக்காட்டுவார்களா?

இவ்வாறு சவால் விடுத்துள்ளார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான அன்வர் இஸ்மாயில்,

அண்மைக்காலமாக அம்பாறையில் பெருகி வருகின்ற ஆட்கடத்தல்,வரிவசூலித்தல் போன்ற செயற்பாடுகளில் ஆயுதம் தாங்கிய குழு ஒன்றே ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றமை பற்றி கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், சம்மாந்துறையில் உள்ள பிரபல வர்த்தக நிறுவனத் தலைவர்கள் புலிகளின் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு நேரடியாகவே பணம் கேட்கப்பட்டுள்ளனர். இதற்கான சான்றுகள் எம்மிடம் உள்ளன.

இதுபற்றி அரசிடமும் பல தடவை முறையிட்டிருந்தோம் எதுவித பலனும் இதுவரை எட்டவில்லை.

எனவே நோர்வேத் தூதுக்குழுவினரிடம் இது பற்றி முறைப்பாடு செய்யவுள்ளோம்.

அதுமட்டுமன்றி வடக்கு-கிழக்கில் இரத்த ஆறு ஓடுவதை நிறுத்த வேண்டும் என எண்ணுபவர்கள் இது விடயத்தில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக இது தமிழீழ விடுதலைப் புலிகளின் கரங்களில் தான் தங்கியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார். (உ-10)

# நிரந்தர வைத்தியர் இன்றி நோயாளர்கள் சிரமம்

(சண்டிலிப்பாய்)

மாதகல் கிராமிய வைத்திய சாலையில் நிரந்தர வைத்தியர் இன்மையால் அங்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் பெரும் ஏமாற்றங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

மேற்படி வைத்தியசாலைக்கு நோயாளர் விடுதி ஒன்று அண்மையில் அமைக்கப்பட்ட போதிலும் நிரந்தர வைத்தியர் இன்மையால் நோயாளர் தங்கிச் சிகிச்சை பெற முடியாதிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, காலை 9மணி முதல் பிற்பகல் 1 மணி வரையுமே தற்போது இங்கு தற்காலிக மருத்துவர் ஒருவர் சேவை புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(உ-258)

## இன்று ஒரு தகவல்

### உண்மைத் துறவியின் உயர்வு!

ஒரு அரசனும் அமைச்சரும் ஒருநாள் மிகவும் சாவகாசமாகப்பேசிக் கொண்டிருந்தார்களாம். அரசன் அமைச்சரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டாராம். "ஏன் அமைச்சரே! ஆசையிலலாமல் ஒருவரால் இருக்க முடியுமா?" என்று. "ஏன் முடியாது! துறவி என்பவர்கள் எல்லாரும் அப்படிப்பட்டவர்கள்தானே!" என்றார் அமைச்சர். "அவர்கள் உண்மையிலேயே ஆசையை விட்டவர்கள்தானா?" என்று கேட்டார் இராஜா. "அப்படித்தான் இருக்க வேண்டும்" என்றார் அமைச்சர். "அப்படியென்றால்... ஆசையே இல்லாத ஓர் உண்மையான துறவியை நான் பார்க்க வேண்டுமே" என்றார்.

"அது என்ன பிரமாதம்! அதற்கு நான் ஏற்பாடு பண்ணுகிறேன்" என்றார் இவர். சொல்லிவிட்டு உடனே புறப்பட்டுப் போனார். எங்கும் தேடினார். அதன் பின்னர்தான் அவருக்குப் புரிந்தது... உண்மைத் துறவியைக் கண்டு பிடிப்பது எவ்வளவு கஷ்டமான காரியமென்று! இருந்தாலும் இராஜாவிடம் சொல்லியாயிற்றே... உண்மைத் துறவியைக் காட்டுகிறேன் என்று! இப்போது என்ன பண்ணுவது? இராஜாவிடம் சொன்னபடி நடக்கவில்லையென்றால் அவருக்குக் கோபம் வந்து விடுமே! அமைச்சர் யோசனை பண்ணினார். அவருக்கு ஒரு வழி தெரிந்தது. இதுதான் சரி என்று முடிவுபண்ணினார்.

அதாவது, அந்த ஊரில் அவருக்குத் தெரிந்த நாடக நடிகர் ஒருவர் இருந்தார். நன்றாக நடிப்பார். அவரைப் போய்ப் பர்த்தார். "இதோ பாரப்பா... எனக்காக நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்" என்றார். "என்ன? "என்று கேட்டார் நடிகர். "நீ... ஒரு துறவி மாதிரி கொஞ்ச நேரத்துக்கு நடிக்க வேண்டும். இராஜா வந்து உன்னைப் பார்த்து விட்டுப் போகிற வரையும் நடி அது போதும். அதற்காக உனக்குப் பத்தாயிரம் ரூபா தருகிறேன்" என்றார். அவர் எந்தக் காலத்தில் இவ்வளவு பணத்தைப் பார்த்திருக்கிறார். அதனாலே உடனே "சர" என்று ஒத்துக் கொண்டார். அமைச்சர் அரண்மனைக்குத் திரும்பி வந்தார். "என்ன அமைச்சரே! இன்னுமா ஒரு உண்மையான துறவி கிடைக்கவில்லை" என்றார் இராஜா.

"உண்மையான துறவி ஒருவரை இப்போதுதான் கொஞ்ச நேரத்திற்கு முன் பார்த்துப் பேசிவிட்டு வருகிறேன். அவர் நமது ஊருக்கு வெளியே... குளத்தம் கரையில் உள்ள ஓர் ஆலமரத்துக்கு அடியில் உட்கார்ந்திருக்கிறார்" என்றார் இவர். "அப்படியென்றால் உடனே புறப்படுங்கள்" என்றார். இராஜா பரிவாரங்களோடு புறப்பட்டார். அங்கே அந்த மரத்தடியில் அந்த ஆள் வேஷம் போட்டுக் கொண்டு துறவி மாதிரி உட்கார்ந்திருக்கிறான. இராஜா நேராகப் போனார்... அந்தத் துறவியின் காலில் விழுந்து வணங்கினார். உடனே இராணியும் அவரின் காலில் விழுந்தார், அடுத்தபடியாக அமைச்சர் விழுந்தார். அவருக்குத் தெரியும் இது நமது ஆள்தான் என்று... இருந்தாலும் என்ன பண்ணுவது? நேரம்! பின்னர் பரிவாரங்கள் எல்லாரும் துறவியின் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டார்கள்.

இராஜா பின்பு தங்கத் தட்டில் பொன்னையும பொருளையும் வைத்து அந்தத் துறவியிடம் மிகவும் பணிவாக நீட்டினார். தாங்கள் தயவு பண்ணி இதை ஏற்றுக் கொள்ள வேண்டும். என்று வேண்டிக் கொண்டார். அந்தத் துறவி பற்றில்லாமல அதைப் பார்த்தார். "எல்லாவற்றையும் துறந்துவிட்ட எனக்கு இவைகள் எல்லாம் எதற்காக?" என்று சொல்லி அதை மறுத்து விட்டார்.

"ஆகா உண்மையான துறவியைப் பார்த்து விட்டோம்" என்கிற ஆனந்தம் அரசருக்கு! வெகு நிம்மதியாகத்திருப்தியோடு அரண்மனைக்குத் திரும்பிவந்தார். அதன் பின்னர் அமைச்சர் யாருக்கும் தெரியாமல் அந்தத் துறவியிடம் ஓடினார். சொன்ன பிரகாரம்பணத்தை நீண்டினார். "இந்தாப்பா நான் உன்னிடம் சொன்னபடி பத்தாயிரம் ரூபாய் எடுதுதது்க் கொள்" என்றார். அந்த ஆள் இராஜாவிடம் சொன்னமாதிரியே "எல்லாவற்றையும் துறந்துவிட்ட எனக்கு இவைகள் எதற்காக? வேண்டாம்" என்றார்.

நடித்தவரைக்கும் போதும் இனிமேல் இந்த நாடகவசனம் எல்லாம் வேண்டாம்... வேஷத்தைக் கலை என்றார் அமைச்சர். இல்லை ஐயா! இது வேஷமில்லை. இது வசனமும் இல்லை. இது உண்மை. கொஞ்சநேரம் துறவிமாதிரி நடித்ததற்கே இந்தத் தேசத்து இராஜா, இராணி, அமைச்சர், பரிவாரங்கள் எல்லோரும் என் காலில் விழுந்து வணங்குகிறார்கள். அப்படியென்றால், உண்மைத் துறவியாக இருப்பது எவ்வளவு பெருமையான விஷயம். நான் உண்மையாகவே துறவியாகப்போகிறேன்... முடிவுபண்ணிவிட்டேன்" என்றார் அந்த நடிகர். வேஷம் கூட எப்படிப் பட்ட விளைவுகளை உண்டுபண்ணுகின்றது பார்த்தீர்களா?

நமது ஆள் ஒருவன்... மிகவும் வசதியாகத் தான் இருந்தான். ஒரு நாள் அவன் சொத்து முழுவதும் திருட்டுப் போய் விட்டது. அதன் பின்னர் இவன் துறவியாகிவிட்டான். ஊர் ஊராகச் சுற்றினான். ஒருகுருநாதரைத் தேடிக் கண்டுபிடித்தான். அவரிடம் சீடனாகச் சேர்ந்துவிட்டான். அவனைப் பார்த்து ஒருவர் "நீ உண்மையான சீடன் தானா?" என்று கேட்டார். "இல்லை... சீடன் மாதிரி நடிக்கிறேன்" என்றான் இவன். அது குருத்துரோகம் இல்லையா?என்றார். என் குரு பண்ணியதுதான் துரோகம். என்னுடைய பணத்தைக் கொள்ளையடித்தது இவர் தான். அதை எங்கே வைத்திருக் கிறார் என்பதைக் கண்டு பிடிப்பதற்குத்தான் இவரிடம் வந்து சேர்ந்திருக்கிறேன்" என்றான் அந்த ஆள்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

---

முஸ்லிம்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்த

# தென்கிழக்கு பல்கலை மாணவர் மக்கள் இணைந்து நேற்று பேரணி

(கொழும்பு)

தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும், முஸ்லிம் மக்களும் இணைந்து ஒலுவிலில் நேற்று மக்கள் எழுச்சிப் பேரணி ஒன்றை நடத்தினர்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வரும் அரசாங்க மற்றும் ஏனைய தரப்பினர்களுக்கு, முஸ்லிம்மக்களின் உரிமைகள், அரசியல் அபிலாஷைகள் என்பன வென்றெடுக்கப்பட வேண்டியது தொடர்பில் அழுத்தம் கொடுக்கும் முகமாகவும், முஸ்லிம் மக்களின் ஒருமித்த குரலை வெளிக்கொணரும் நோக்குடனும் இவ்வெழுச்சிப் பேரணி நடைபெற்றது.

இப்பேரணியின் போது, சமஷ்டி முறைத்தீர்வில் முஸ்லிம் மக்களின் சுயாட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டும். வடக்கு - கிழக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு மீள் குடியேற்றத்திற்கென வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் நிதி நியாயமான முறையில் முஸ்லிம்மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். பிரிவுபட்டிருக்கும் முஸ்லிம் அரசியல் தலைமைத்துவங்கள், முஸ்லிம் சமூக நலனைக் கருத்தில் கொண்டு ஒன்று சேரவேண்டும். இறுதித்தீர்வு வடக்கு - கிழக்கு முஸ்லிம் மக்களின் சம்மதத்துடன் எட்டப்படவேண்டும். ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அட்டம்பள்ளம், பாலமுனை ஆகிய பிரதேசங்களில் ஆரம்பித்த இருபேரணிகள் ஒலுவில் வளாகத்தில் வந்தடைந்தன.

கடந்த காலங்களில் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட சொத்து இழப்பீடுகள், உயிர்ச்சேதங்கள் என்பனவற்றை நினைவு கூரும் முகமாக ஒலுவில் வளாகமுன்றலில நினைவுத்தூபி ஒன்றும் திரைநீக்கம் செய்யப்பட்டது. (உ-8)

---

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க

# யாழ். வதிவிடப் பிரதிநிதியாக ஹென்ஸ் பீற்றர் நியமனம்

(யாழ்ப்பாணம்)




சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதியாக இன்று முதல் புதியவர் செயற்படவுள்ளார்.

இதுவரை காலமும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதியாக கடமையாற்றிய சிசில்க்ரோஸ் தலைமையகமான ஜெனீவாவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதையடுத்தே, இது வரை காலமும் ஜெனீவாவில் பணியாற்றிய ஹென்ஸ் பீற்றர் இந்த இடத்திற்கு இன்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் நேற்றைய தினம் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தி தமது பங்கு பணிகள் குறித்து விளக்கமளித்ததுடன், மக்கள் மற்றும் பத்திரிகைகள் தமக்கு அளித்த ஒத்துழைப்புகளுக்கும் நன்றி தெரிவிததுள்ளனர். (உ-4)



---

## இராசி பலன்

**30. 01. 2003**

**(தை 16, வியாழன்)**

| | |
|---|---|
| திரயோதசி | மாலை 5.53வரை |
| பூராடம் | பி.இ 1.41வரை |
| இராகுகாலம் | 2.06 - 3.36 |
| சுபநேரம் | 8.06 - 9.36 |

### பிரதோஷ விரதம்

**மேடம்**
தொழில் சிந்தை, தந்தைவழி உறவு, புதியதிருப்பம், வீண்பகை.

**இடபம்**
வாகனபயம், திருடர்தொல்லை, காரியதடங்கல், போசனசுகம்.

**மிதுனம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, உறவினர் வருகை, செய்தொழில் விருத்தி, எதிர்பாராத நன்மை.

**கடகம்**
சுவாரஸ்யம், உடல்நலம், நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும்.

**சிங்கம்**
பெரியோர் மதிப்பு, குடும்பக்கவலை, சிறு வியாதி, வியாபார நன்மை.

**கன்னி**
போசனசுகம், ரோகபயம். மாதாசுகம், முயற்சி கைகூடும்.

**துலாம்**
பிரயாண நன்மை, எடுத்த கருமம் கைகூடும், பொருள் சேர்க்கை, வாக்கு மேன்மை.

**விருச்சிகம்**
வீண் விவாதம், காரியதாமதம், மனக் கிலேசம், தனவிரையம்.

**தனுசு**
ஜனவசியம், நல்லமுயற்சி, நண்பர்கள் உதவி, சயனசுகம்.

**மகரம்**
பிரயாண அலைச்சல், உஷ்ணவியாதி, பொருள்சேரல், முயற்சி கைகூடும்.

**கும்பம்**
நண்பர்கள் சந்திப்பு, கௌரவம், காரிய அனுகூலம், தொழில் சிந்தை.

**மீனம்**
தொழில்மேன்மை, நல்லசம்பவம், காரியசித்தி, பிறர் ஒத்துழைப்பு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்

---

# பிரஜாவுரிமை சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படும்

### லொக்குபண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

பிரஜாவுரிமை சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளதாக நிதி அமைச்சர் வி.ஜ.மு. லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

பிரஜாவுரிமை திருத்த சட்டமூலங்களை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அமைச்சர் தொடர்ந்தும் பேசுகையில், தாய் அல்லது தந்தை இந்த நாட்டின் பிரஜையாக இருந்தால், குழந்தைகளும் பிரஜாவுரிமை பெற்றுக் கொள்ளலாம் என்னும் நோக்கில் பிரஜாவுரிமை சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன.

தந்தை இந்த நாட்டின் பிரஜையாக இருந்தால் மாத்திரமே தற்போது. குழந்தைகளுக்கு பிரஜாவுரிமை வழங்கப்படுகிறது.

ஆனால், அரசியலமைப்பு மற்றும சர்வதேச உடன்பாடுகளுக்கு அமையவே இந்தத் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன. (உ-8)

---

பொங்கல் விழாவில் புகுந்த

# புலனாய்வுப் பிரிவினர் புலிகள் மீது விசாரணை

(மன்னார்)

மன்னார் மாவட்ட கமநலசேவைத திணைக்களம், தமிழீழ, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், மனனார் மாவட்ட விவசாய சம்மேளனம் ஆகியன இணைந்து நடத்திய பொங்கல் விழாவில் திடீரெனப் புகுந்த புலனாய்வுப் பிரிவினர் அங்குள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களை கடும் விசாரணைக்குட்படுத்தியதாக தெரிவிக்கப் படுகிறது.

26.01.2003ல் நடைபெற்ற இப பொங்கல் விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மன்னார் மாவட்ட அரச அதிபர், இந்துகலாசார அமைச்சின் செயலாளர், ஜீவோதய இயக்குநர் அருட்திரு அரியநாயகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வேளை, 'இவ்வாறான செயல யுத்த நிறுத்த மீறல்' என நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (உ-10)

---

# ஏ-9 வீதிப் போக்குவரத்து இடைநிறுத்தப்படாது

(யாழ்ப்பாணம்)

ஏ-9பாதையின் புனரமைப்புப் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாகவும் இதற்காக ஏ-9வீதிப் பாதை தற்காலிகமாக மூடப்படமாட்டாது எனவும் விதிப்புனரமைப்புத் திட்டப் பணிப்பாளர். சு.மெய்கண்டான் தெரிவித்துள்ளார்.

கடந்த 4ஆம் திகதி ஆரம்பிக்கப் படபட்டுள்ள இப்புனரமைப்புப் பணிகள இவ்வருட இறுதிக்குள் முடிந்துவிடும் அதன்பின்னர். அப்பாதையூடாக மக்கள் பயணஞ் செய்வதில் எதுவித சிரமமும் இருக்காது என்றும அவர் மேலும் தெரிவித்தார்

இதேவேளை எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் பாதை தற்காலிகமாக மூடப்படும் என முன்னர் செய்திகள்வெளியானமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு —குறள்—

## வலம்புரி

### யாழ்.இந்துவின் நற்பணி

யாழ்.இந்துக்கல்லூரி வளாகத்தல் அமைக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் உருவச் சிலை இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஈழத்தில் சைவத்தையும், தமிழையும் தனது இரு கண்களெனப்போற்றியவர்.அதற்காகத் தனது உடல, ஆவி முழுவதையும் அர்ப்பணித்தவர்.ஈழத்தில் சைவமும் தமிழும் தழைத்து நிற்க காரணகர்த்தாவாக இருந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என்பது மறுக்கமுடியாத உண்மை. அவரின் தீர்க்க தரிசனமான அர்ப்பணிப்புக்களே ஈழத் தமிழர்களின் அறிவியல் வளர்ச்சிக்கு வித்திட்டது.

இலவசக் கல்வியின் தந்தை சி.டபிள்யு.டபிள்யு.கன்னங்கரா எனக் கூறுபவர்கள் ஆறுமுக நாவலரின் கல்விப் பணியை அறியாதவர்களாகவே இருக்க முடியும்.

திண்ணைப் பள்ளிகளை அமைத்து கல்விப் பணி புரிந்த அவரின் சேவை அளவிடற்கரியது.அந்நியராட்சியின் அகோரமும்,மதமாற்றமும் வேகமாகப் பரவிய காலத்தில் தனியொரு மனிதராக நின்று தமிழையும்,சைவத்தையும் வளர்த்த அப்பெரியாரை பெருமைப்படுத்தி திருவாவடுதுறை ஆதீனம் அவருக்கு நாவலர் என்னும் பெரும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது எனில்,அது ஆறுமுக நாவலருக்குக் கிடைத்த தனிப்பட்ட கௌரவமன்று.உண்மையில் ஈழத்தமிழருக்குக் கிடைத்த உயர்ந்த கௌரவம் என்பதை இன்றைய தலைமுறை மறந்து விடலாகாது.

அத்தகைய் பெரியாரின் உருவச் சிலை,நல்லூர்க் கந்தனின் திருவாலய முகப்பில் கம்பீரமாகக் காட்சியளித்தது. ஆனால், ஆறுமுகநாவலரின் பெருமையை அறியாதவர்கள்,அங்கிருந்து அச் சிலையை அகற்றினர்.அதன் காரணமாக தமிழ் அறிஞர்களும், சைவப் பெரியார்களும் வேதனைப்பட்டனர். குறிப்பாக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், சைவத்தமிழ் அன்னை கலாநிதி தங்கம்மாஅப்பாக்குட்டி ஆகியோர், மீண்டும் நல்லூர் முன்றலில் நாவலரின் சிலையை நிறுவ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.எனினும, இந்து சமயத்தில் துணிவுடைய இந்து இளைஞர்கள் இல்லாத காரணத்தினால்-நாவலின் பெருமையை உணராத இளம் சமூகத்தினால், பொயவர்களின் ஆவலை நிறைவேற்ற முடியாது போயிற்று.

எனினும்இன்று நாட்டின்புகழ் பூத்தகல்லூரிகளில் ஒன்றான-தமிழர்களின் கல்விக் குறிகாட்டியின் ஓர் சின்னமாக-இந்து சமயத்தின் பெயரை வானுயர்த்திக்காட்டும் சிகரங்களில் ஒன்றாக விளங்குகின்ற யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நாவலருக்குச் சிலை எடுத்திருப்பது மகிழ்வுக்குரியது, பெருமைக்குரியது.தமிழர்கள் நன்றி மறந்தவர்களல்ல என்பதை நிரூபிப்பது. அவ்வகையில் நாவலருக்குச் சிலையெடுத்து யாழ் இந்துக் கல்லூரி தனக்கு மேலும் பெருமையை தேடிக் கொண்டது.இதற்கு உந்து சக்தியாக இருந்த ஆறுதிருமுருகன் பாராட்டுதற்குரியவர்.

# கிழக்கில் இடம்பெறும் அடாத செயல்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பில்லை

## மறுக்கிறார் மட்டு-அம்பாறை அரசியல் பிரமுகர்

(லண்டன்)

கிழக்கு மாகாணத்தில் மாற்றுத் தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கடத்தப்படுதல், காணாமல் போதல் மற்றும் கொலை செய்யப்படுதல் போன்ற சம்பவங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென்று விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்டத் துறை அரசியல் பொறுப்பாளர் கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

லண்டன் பீ.பீ.சிக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

மட்டக்களப்பு மாவட்டத்தில் 80 வீதமான பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. அங்கு ஆட்கடத்தல் மற்றும் காணாமல் போகின்றமை போன்ற சம்பவங்கள் இது வரை நடைபெற்றதாக இல்லை.

ஆனால், இச்சம்பவங்கள் எல்லாம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலேயே நடைபெறுகின்றன.

அத்துடன், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஆயுதக் குழுக்களும் அதிகம் நடமாடுகின்றன. அக்குழுக்களுக்குள் பல பிரச்சினைகள் கருத்துவேற்றுமைகள் இருக்கின்றன. அவை வெளியுலகுக்குத் தெரியாது.

அவர்களுக்குள் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டு ஆட்கடத்தல் மற்றும் காணாமல் போதல். சம்பவங்கள் நடைபெறுகின்றன. பின்னர் அதனை விடுதலைப் புலிகளின் தலையில் அவர்கள் சுமத்தி விடுகிறார்கள்.

மாற்றுத் தமிழ்க் கட்சிகள் ஜனநாயக முறைப்படி அரசியலில் ஈடுபடுவதை நாம் ஒருபோதும் தடுக்கவில்லை. அவர்கள் தாராளமாக அரசியலில் ஈடுபட முடியும். நாம் அவர்களை அரசியல் நடவடிக்கையில் ஈடுபட முடியாதவாறு தடுப்பதாகக் கூறுவதை முற்றாக மறுக்கின்றேன்.

முஸ்லிம் சமூகத்துக்குள் பல ஆயுதக் குழுக்கள் செயற்படுகின்றன. இக்குழுக்கள் அம்மக்களுக்கிடையே பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன என்றார்.

மேலும், 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களை விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்த்துக் கொள்வது இல்லையென்றும் மீண்டும் வலியுறுத்திக் கூறினார். (இ)

## பங்குச் சந்தை முன்னேற்றம் அமைச்சர் சொக்ஸி திருப்திகரம்

(கொழும்பு)

வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்துள்ளமையினால் உள்நாட்டு பங்குச் சந்தைகளின் நடவடிக்கை முன்னேற்றமடைந்துள்ளதாக நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சொக்ஸி மேலும் கருத்து வெளியிடுகையில்,

இதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும்.

அண்மைக்காலமாக நடைபெற்று வந்த யுத்தத்தினால் இலங்கைப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிப் பீடம் ஏறிய பின்னர் மீண்டும் நாட்டுப் பொருளாதாரம் வளர்ச்சி அடைய ஆரம்பித்துள்ளது.

இவ்வாறு வளர்ச்சி அடைவதற்கு வெளிநாட்டு முதலீடுகளே இதற்கு முக்கிய காரணம் என்றார். (உ-10)

## சிறுபான்மை மக்களின் உரிமைகள் குறித்து வட-கிழக்கில் கருத்தரங்குகள்

(கொழும்பு)

சிறுபான்மை இன மக்களுக்கான உரிமைகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவுறுத்தும் கருத்தரங்குகளை மனித உரிமைகள் ஆணைக்குழு வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடத்தவுள்ளது.

இதற்கமைய சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் தொடர்பான முதலாவது கருத்தரங்கு திருகோணமலையில் இன்று நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களிலும் நடத்தப்படவுள்ளது. (உ-8)

### பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது

(ஊர்காவற்துறை)

இளம் பெண்ணின் சடலமொன்று நேற்று முன்தினம் நாரந்தனை மத்தியில் உள்ள வீட்டுக் கிணறொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த தி.மகேஸவரி(வயது19)என்ற பெண்ணின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டதாகும். இச் சம்பவம் குறித்து ஊர்காவற்துறைப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-75)

## மக்களின் தேவையறிந்து சேவை செய்க யாழ். எம்.பி ஆனந்தசங்கரிக்கு புளொட் அமைப்பு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரிக்கு புளொட் அமைப்பின் யாழ். மாநகர சபை உறுப்பினர் எஸ்.இருதயராஜன் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கடந்த 2001ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்லில் வெற்றிபெற்று பாராளுமன்றம் சென்றுள்ள தங்களது கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் ஒதுக்கீடுகளை மக்களின் அவசர அவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குச் செலவிடாமல் அரசியல் ஆதாயங்களுக்காகச் செலவு செய்வதையிட்டு நாம் மிகவும் மனம் வருந்துகிறோம்.

யாழ.மாநகர சபையின் கரையோரப் பிரதேசங்கள் அனைத்தும்மிகவும் கடுமையாகப்பாதிக்கப்பட்டுள்ளன. இப் பகுதிகளில் உள்ள வடிகால்கள அனைத்துமே புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டிய நிலையில்உள்ளன. இன்றைய சுகாதாரச் சீர்கேட்டிற்கு இதுவும் ஒரு காரணம்.பெரும்பாலான மதகுகள்,பாலங்கள்,வீதிகள் யாவும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் என்றரீதியில் தங்களுடைய கூட்டமைப்பினரின் 2003ம் ஆண்டிற்கான ஒதுக்கீடான 30மில்லியன் ரூபாக்களில் இருந்து குறைந்தது 10மில்லியன் ரூபாக்களையாவதுயாழ்.மாநகர சபைக்கு ஒதுக்கி இப்பகுதிகளில் காணப்படும் சுகாதாரச் சீர்கேட்டை ஓரளவேனும் நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமபடி பாதிக்கப்பட்டுள்ள மக்கள் சார்பாகவும் மாநகராட்சி மன்றத்தின் சார்பாகவும் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## கடனட்டை மோசடியில் ஈடுபட்ட மூவர் கைது

(கொழும்பு)

நீர்கொழும்புப் பகுதியில் கிரடிற் காட் மோசடியில் ஈடுபட்ட மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒரு பெண்ணும் அடங்கியுள்ளார்.

இவர்களிடமிருந்து ஒவ்வொன்றும் பத்து லட்சம் ரூபா பெறுமதியான 6 கிரடிற் காட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கைதான பெண் ஒரு கிரடிற் காட்டை உபயோகித்து 2 லட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக் கல்லையும் கொள்வனவு செய்திருந்தார்.

இவர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

ஏனைய இருவர் மீதும் சி.ஐ.டி பொலிஸார்மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை இலங்கையில் நடைபெற்ற மிகப் பெரியதான 7 கோடி ரூபா கிரடிற் காட் மோசடி சம்பந்தமாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (உ-8)

## எரிபொருள் செலவை செலுத்துமாறு அறிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு கலைக்கப்பட்ட பின்னர், சுகாதார அமைச்சின் 7 வாகனங்களுக்கு எரிபொருளை பெற்றுக்கொண்டமைக்காக 4 லட்சத்து 11 ஆயிரத்து 21 ரூபாவை செலுத்துமாறு முன்னாள் சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகார எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே சுகாதார அமைச்சர் பி.தயாரத்னா இதனைத் தெரிவித்தார்.

2001 ஆம் ஆண்டு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு கலைக்கப்பட்ட பின்னர் அரச அனுமதியின்றி எரிபொருளை பெறறுக்கொண்டமைக்காகவே இவ் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (உ-10)



## சாயி அருளமுதம்

எல்லா நம்பிக்கைகளும் (மதங்களும்) ஒன்றுக்கொன்று தொடர்புடையன, அத்துடன் அவை போதிக்கும் நெறிகள், பரிந்துரைக்கும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றிலும் அவை ஒன்றுக்கொன்று கடன்பட்டுள்ளன. காலப்பகுப்பின் படி, வேதிய மார்க்கமே முதன்மையானது. ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு முன்தோன்றிய பௌத்தமதம் அதனுடைய புத்திரனாகும். கீழைத்தேய செல்வாக்கின் தாக்கம் மிகுதியாகக் கொண்ட கிறிஸ்துமதம் அதனுடைய பேரனாகும், கிறிஸ்து மதத்தின் தீர்க்க தரிசிகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும் இஸ்லாமிய மதம் கொள்ளுப் பேரனாகும். இம்மதங்கள் யாவும் மனத்தைத் தூய்மைப்படுத்தி, மனிதனைத் தெய்வத்துடன் ஒன்று சேர்ப்பதற்கு, அன்பையே அடிப்படையான கட்டுப்பாடாகக் கொண்டு விளங்குகின்றன.

- நன்றி

நாளாந்த நற்சிந்தனை

## சூடான் பாராளுமன்ற சபாநாயகர் இலங்கை வருகை

(கொழும்பு)

சூடான் பாராளுமன்ற சபாநாயகர் அகமட் ஆப்ரகாம் தலைமையில சூடான் பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இவர்கள் பாராளுமன்ற அலுவலகத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இச்சந்திப்பில் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா, எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ-10)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் இருநூறு வீட்டுத்திட்டம்

(தென்மராட்சி)

ஜேர்மன் ஒத்துழைப்பு நிறுவனம் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள பாதிக்கப்பட்ட 14 கிராம சேவையாளர் பிரிவுகளில் 200 வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தை அமுல் செய்யவுள்ளது.

தாவளை, இயற்றாலை, மட்டுவில் மத்தி, மட்டுவில், நுணாவில், சரசாலை தெற்கு; சந்திரபுரம், கைதடி நுணாவில், மண்டுவில், நாவற்குழி மேற்கு, மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி வடக்கு, கோகிலாக் கண்டி, தென்மட்டுவில், நுணாவில் மத்தி ஆகிய பிரிவுகளில் தலா 15 வீடுகள் இவ்விதம் அமைக்கப்படும்.

ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு இலட்சத்துப் பதினையாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை நிறுவனம் பயனாளிகளுக்கு வழங்கும் எனத்தெரியவருகின்றது. (உ-77)

# யாழ். குடாநாட்டில் வேகமாக பரவும் டெங்குக் காய்ச்சல்.

### சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் டெங்குக் காய்ச்சல் அதிகரித்து வருவதாக சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி உமா சிவபாத சுந்தரம் தெரிவித்துள்ளார்.

சுகாதாரத் திணைக்களத்தினால யாழ் போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட டெங்குக் காய்ச்சல் பரிசோதிக்கும் கருவி மூலம் சோதனை மேற்கொண்டதில் டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 25ம், 26ம் திகதிகளில் யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் ஐந்து நோயாளர்களும், நேற்றைய தினம் கோண்டாவில், திருநெல்வேலி, ஆனைக்கோட்டை, உடுப்பிட்டி போன்ற இடங்களில் தலா ஒரு நோயாளியும் இனங் காணப்பட்டுள்ளதாக அவர் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை பொதுமக்கள், பொது நிறுவனங்கள், தொண்டர் அமைப்புக்கள் என்பன தமது சுற்றாடலில் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளில் விழிப்புடன் ஈடுபடுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ந-5)

# இந்திய வம்சாவழி மக்களுக்கு பிரஜா உரிமை வழங்கப்படும்

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதி

(கொழும்பு)

இந்திய பிரஜா உரிமை திருத்தச் சட்டத்தை ஏற்படுத்துவதன் மூலம் அனைத்து இந்திய வம்சாவழி மக்களுக்கும் எதிர் வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்பு பிரஜா உரிமை வழங்கப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிரஜா உரிமை திருத்தச் சட்டம் தொடர்பாக ஆளும்கட்சி தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள்பிரதமரைச் சந்தித்துப் பேசும்போதே அவா இவ்வுறுதி மொழியை வழங்கியுள்ளார்.

இதேவேளை பிரஜா உரிமை திருத்தச்சடடத்தில் இந்திய வம்சாவழி மக்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டியதறகான சரத்து இணைக்கப்பட வேண்டும் என அனைத்து ஆளும் கட்சி த்தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்களும எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் இச்சந்திப்பில் வலியுறுததிக்கூறி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)



அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவின் ஏற்பாட்டில் வடக்கு-தெற்கு சமய நல்லிணக்க சுற்றுலா மேற் கொண்டு தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணம் வந்த பௌத்த துறவிகளின் சிலரைப் படத்தில் காணலாம்.

## நடிகை பண்டரிபாய் காலமானார்



(சென்னை)

பழம் பெரும் இந்திய திரைப்பட நடிகை பண்டிரிபாய் தனது 74 வது வயதில் நேற்று சென்னையில் மரணமானார்.

1949ம் ஆண்டு எ.வி.எம். நிறுவனம் தயாரித்த ''வாழ்க்கை'' என்ற படத்தில் இவர் முதல் அறிமுகமானவர். இவர் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அறிமுகமான பராசக்தியில் அவருக்கு ஜோடியாக நடித்துள்ளார கன்னடநடிகர் ராஜ்குமார் முதன்முதலில் கதாநாயகனாக நடித்த ''வெடாரா கண்ணப்பா'' என்ற திரைப்படத்திலும் அவருக்கு ஜோடியாக நடித்துள்ளார்.

சாதனை படைத்த அந்த நாள், குடியிருந்த கோவில், தெய்வத்தாய், மன்னன் போன்ற ஆயிரத்துக்கும் மேற்பட்ட திரைப படங்களில் குணச்சித்திர வேடங்களில் இவர் நடித்துள்ளார். (இ-5)

### யாழ்.பல்கலை.....

*பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்-58வாக்குகள் (உயர்பட்டப்படிப புக்கள் பீடாதிபதி யாழ்பல்கலைக் கழகம்)

*பேராசிரியர் மோகனதாஸ்-43 வாக்குகள் (வவுனியா வளாக பீடாதிபதி )

பேரவை உறுப்பினர் ஒருவர் விருப்பு அடிப்படையில் மூன்று வாக்குகளை அளிக்கமுடியும்.

இதன் பிரகாரம் முதலாம், இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்கின் அடிப்படையில் அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெறுபவர்கள மூவர் பேரவையினால் துணைவேந்தர் பதவிக்காக சிபார்சு செய்யப்படுவர்.

இம் மூவரின் பெயர் விபரமும் பல்கலைக்கழக மானிய ஆணைக குழுவுக்கு பல்கலைக்கழக பேரவையினால் அனுப்பிவைக்கப்படும்.

அவ்விபரம் மானிய ஆணைக் குழுவினால் உயர்கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கு பரிசீலிக்கப்பட்டு இறுதி முடிவுக்காக ஜனாதிபதிக்கு விபரங்கள் அனுப்பிவைக்கப்படும்.

ஜனாதிபதி இவ்விபரத்தின் அடிப்படையில் துணைவேந்தரை நியமனம் செய்வார்(இ)

### அனுருத்த....

இதேவேளை படுகொலை இடம்பெற்ற தேர்தல் தினத்தன்று கண்டி இராணுவ கட்டளையிடும் தலைமையகத்தில் இருந்த இராணுவத்தினர் எவரையும் முகாமுக்கு வெளியே கடமைக்காக அனுப்ப வேண்டாமென அனுருத்த ரத்வத்த கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருந்ததாக கண்டி இராணுவ கட்டளையிடும் தலமையக முன்னாள் கட்டளை அதிகாரி பிரிகேடியர் ரங்பண்டாதம்மித்த நீதிமன்றில் நேற்று சாட்சியம் அளித்தார்.

விசாரணைகள் இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளன.(த)

## பாடசாலை மட்ட கிரிக்கெற் போட்டி

(யாழ்ப்பாணம்)

19 வயதுக்குட்பட்ட பாடசாலை மட்ட கிரிக்கெற் அணியினருக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி நருக்குமிடையிலான போட்டியில நாளை கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து கனகரத் தினம் மத்திய மகாவித்தியாலயம் மோதவுள்ளது.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிகள் நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளன. (ந-5)

# கிணறுகளில் பொலிபோம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரபல பாடசாலைகளிலுள்ள கிணறுகளில் ''பொலிபோம்'' என்ற உடல் நலத்தைப்பாதிக்கக்கூடிய ஒருவகைப்பதார்த்தம் கலந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி எஸ். திருச்செல்வம் தலைமையிலான குழுவினரால், பாடசாலைக் கிணறுகள் ஒவ்வொன்றிலிருந்தும மாதிரிகளை எடுத்து பரிசோதனைக கூடத்தில் ஆய்வு செய்த போதே இவ்விடயம் தெரியவந்துள்ளது.

புளியந்தீவு பிரதேசத்திலுள்ள பாடசாலைக் கிணறுகளிலும், மகாஜனாக்கல்லூரிக் கிணற்றிலும் இப்பதார்த்தம் இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் முடிவுகள் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிமனைக்கு உடனடியாக தொிய படுததப்பட்டபோதிலும், இதுவரை குறிப்பிட்ட பாடசாலைகளின் நிர்வாகத்திற்கு அறிவிக்கபபட வில்லை என்றுதெரிவிக்கப படுகின்றது. (இ-5)

# இளைஞர் சேவை அலுவலர் நியமனம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச இளைஞர் சேவை அலுவலராக ஐ.தபேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சேவை அலுவலராக கடமையாற்றிய இவர் இடமாற்றம் பெற்று ஊர்காவற்றுறை பிரதேசத்திற்கு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மேற்படி பிரதேச செயலர்பிரிவில் கடந்த ஒரு வருடமாக இளைஞர் சேவை அலுவலருக்கான வெற்றிடம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5-75)

# அபிவிருத்திக்கு உலக வங்கி உதவி

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு ஒன்றரைக்கோடி டொலர்களை வழங்க உலக வங்கி முன்வந்துள்ளது.

இந் நிதிவழங்கலுக்கான ஒப்பந்தமொன்றில் உலக வங்கியும் அரசும் நேற்றுக் கொழும்பில் கைச்சாததிட்டுள்ளன.

உலக வங்கியினால் வழங்கப்படவுள்ள இப்பணம் பொருளாதார மறுசீராக்கல் தொழில்நுட்ப உதவித்திட்டத்துக்காக வழங்கப்படவுள்ளதாகவும் நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளதுடன பொருளாதரா உட்கட்டமைப்பைப பெருக்குவதற்கு இதற்கான நிதியம் ஒன்றும் உருவாக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி வழங்கும் இந் நிதியை குறைந்த வட்டியுடன் முப்பது வருடங்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# யாஎல சரணாலயத்தில் சூடு பாதுகாப்பு ஊழியர் பலி

(யாஎல)

யாஎல சரணாலயத்தில் வேட்டைக்காரர் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சரணாலய பாதுகாப்பு ஊழியர் ஒருவர் உயிர் இழந்தார்.

சரணாலயத்திற்குள் சட்ட விரோதமாக நுழைந்து வேட்டையாட முற்பட்ட குழுவினரை சரணாலய தீடீர் சுற்றிவளைப்புப் பரிவினர்சுற்றி வளைத்து அவர்களையக் கைது செய்ய முற்பட்ட போதே இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

வேட்டைக் குழுவினில் இருவர் சரணாலய பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணைகளை கதிர்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

### நம்பியாரின்....

ஒழித்துவிட்டு புதிதாக ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையை செய்ய வேண்டுமென்ற அவசியம் அரசுக்கு இல்லை.

புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசும், விடுதலைப் புலிகளும் வெற்றிகரமாக அமுல்படுத்திவரும இவ்வேளையில் ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தை அடுத்த மாதம் 7ம், 8ம் திகதிகளில் ஜேர்மன் தலைநகர் பேர்ளினில் நடைபெறவுள்ளது.

இப் பேச்சுவார்த்தையின் போது, இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றம், உயர் பாதுகாப்பு வலயம், மனித உரிமை தொடர்பான விவகாரங்கள் முக்கியமாக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இப் பேச்சுவார்த்தையின் போது சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவர் மாசலினும் கலந்து கொள்ளவுள்ளார்.

ஜப்பானிய அரசு விடுதலைப் புலிகளுக்கு 34 பில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது என்ற பத்திரிகைச் செய்திகளை மறுத்துள்ள அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் புலிகளும், அரசும் இணைந்த சமாதானச் செயலகத்திற்கே ஜப்பானிய அரசு அந்நிதியை வழங்கியுள்ளது என்றும் கூறினார்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் எப்பொழுது பொதுத் தேர்தல் வந்தாலும் அதனை அரசு எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறது கடந்த 12மாதகாலங்களிலும் அரசின் செயற்பாடுகள் குறித்து மக்கள் திருப்தி அடைந்திருப்பதாகவும், தேர்தல் வந்தால் மேலும் கூடுதல் ஆசனங்களைப் பெறுவோம்.

யூன் மாதம் 16ம், 17ம் திகதிகளில் யப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் சர்வதேச உதவிகளைப் பெறுவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

### இராணுவத்தினர்.....

கலந்து கொள்வதற்கு தமக்குப் போதிய பாதுகாப்பு இல்லை என சாட்சிகள் நால்வர் யாழ்.மனித உரிமை ஆணைக்குழு ஊடாக நீதிமன்றிற்கு அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து சாட்சிகள் நால்வரையும் அடுத்த வழக்கு விசாரணையில் விசேட பொலிஸ் பாதுகாப்புடன் கொழும்பு மேல் நதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறும் யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு ட்ரயல் அட்பார் நீதிமன்றம் நேற்று உத்தர விட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகளான எச்.ஐ.இமாம்,சரத் அம்பேப்பிட்டிய,குமார் எக்கரத்தின ஆகியோர் முனனிலையில் இந்த வழக்கு விசாரணைகள் இடம் பெற்றன.

2000ம் ஆண்டு டிசம்பர்19ம் திகதி மிருசுவிலில் 5வயது குழந்தை உட்பட 8 பொது மக்கள் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்ட பின்னர் மலக் குழியில இருந்து சடலமாக மீட்கப்பட்டமை தெரிந்ததே. (த)

### இயல்பு நிலையை....

துன்புறுத்தியும் வருகின்றனர். தமது சொந்த நிலங்களில் விவசாயம் செய்ய முடியாமலும் நீண்ட கடல் பரப்பில் மீன்பிடிக்க முடியாமலும் சொந்தக்கால்களில் நின்று சுயதொழிலில் ஈடுபடுவதற்கும படையினர் தொடர்ந்தும தடையாகவுள்ளனர்.

இந் நிலையில் சுயமான இயல்பு வாழ்க்கை திரும்பிவிட்டதாக சர்வதேச உலகிற்கும் தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துக்காட்டவும் தங்களுடைய கட்சி அரசியல் விளம்பரத்துக்காகவும் என்றும் இல்லாதவாறு தமிழர் தாயகத்தை நோக்கி அமைச்சர்கள் வருகிறார்கள். இவர்களை வரவேற்பதற்கு இங்கு ஒரு கூட்டம முண்டியடித்துக கொண்டு நிற்பதை காணமுடிகின்றது.

தமிழீழ விடுதலைப் போராடடத்தில் நாம் இழந்த இழப்புக்களை இதனால் ஈடுசெய்ய முடியாது என்பதை எம் மக்கள் அறிவார்கள்

எதிர்காலத்தில் இயல்பு நிலையை ஏற்படுத்தாமல் அமைச்சர்கள் எமது தாயகம் நோக்கி வந்தால் அதனைத் தன்மானமுள்ள தமிழர்களாகிய நாம் பகிஷ்கரிப்போம்.

அதேவேளை நாளை வெள்ளிக கிழமை சில நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார். இதையொட்டி அன்றைய தினம் அரச, அரசசார்பற்ற கூட்டுறவு, கல்வி பொதுநிறுவனங்களைச்சார்ந்த ஊழியர்கள் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் கறுப்புப்பட்டியணிந்து கடமைக்குச் சென்று தங்களின் உணர்வலைகளை வெளிப்படுத்துமாறு யாழ்ப்பாண மாவட்ட பொதுஅமைப்புக்கள் ஒன்றியம வேண்டுகோள் விடுத்துள்ளது என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இதேவேளை நம்பியாரின் அறிக்கைக்கு கண்டனம் தெரிவித்து வலிகிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் அ.க.த கிருஷ்ணராசா, அச்சுவேலி ஆவரங்கால் வர்த்தக சங்கத் தலைவர் பொ.அருள்ானந்தம், யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் வலிகாமம் கோட்ட பொதுஅமைப புக்களின் ஒன்றியத்தலைவர் இ.சாம்பசிவம், தீவக மக்கள் நலன்காப்பக செயலாளர் எஸ்.ரங்கன் ஆகியோரும் தமது வன்மையான கண்டனங்களைத தெரிவித்துள்ளனர். (இ,த)


## தென்மராட்சி ஓய்வூதியம் பெறுவோர் நலன்புரிச் சங்கம் சாவகச்சேரி

### 12வது வருடாந்தப் பொதுக் கூட்டம்.

சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 02-02-2003 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

புதிய ஆண்டுக்கான நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு இடம் பெறவுள்ளதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகங்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சந்தா, சந்தா நிலுவை அறவீடும், புதிய அங்கத்தவர் இணைப்பும் அன்றையதினம் நடைபெறும்.

கூட்டத்தில் கலந்து கொள்ளும் அங்கத்தவர்களுக்கு பஞ்சாங்கக் கலண்டர் இலவசமாக வழங்கப்படும்

மா. துரைராசா
செயலாளர்.

(6499)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.